விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 15.03.2021 திங்கட்கிழமை | இதழ் : 105 | பக்கங்கள் : 16



08

ஈஸ்டர் தாக்குதல் நவாலி குண்டு வீச்சு நீதி



12

மியன்மாரில் இராணுவம் தொடர்ந்து அட்டூழியம்



13

மீண்டுமொரு சாதனை படைத்தார் மிதாலி ராஜ்



14

எங்களை ஏன் எவரும் சந்திக்க வரவில்லை?

## ஜெனிவா தீர்மானம்:

# 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும்!

* திருத்தப்பட்ட பிரேரணையில் புதிய பந்தி இணைப்பு
* தீர்மானம் நாளை இறுதியாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும்

ஜெனிவா, மார்ச் 15

இலங்கை குறித்த ஐ.நா. இணைத் தலைமை நாடுகளின் பிரேரணையின் இரண்டாவது தடவையாகத் திருத்தப்பட்ட நகல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளியிடப்பட்டுள்ளது. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது உட்பட பல விடயங்கள் இதில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளன. 02

## இறைமையை மீறும் ஜெனிவா பிரேரணை

### அமைச்சர் தினேஷ் கடும் சீற்றம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரிட்டன் தலைமையிலான இணைத் தலைமை நாடுகளால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை இலங்கையின் இறைமையை மீறுவதாக அமைந்திருப்பதுடன், நட்புக்கு விரோதமான ஒரு 02

## புலிகள் மீதான தடை பிரிட்டனில் மீளாய்வு!

### உள்துறை அமைச்சருக்கு தீர்ப்பாயம் உத்தரவு

லண்டன், மார்ச் 11.

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து மீளாய்வு செய்யுமாறு இரகசிய தீர்ப்பாயமொன்று உள்துறை அமைச்சர் ப்ரீதி பட்டேலிற்கு உத்தரவிட்டுள்ளது என லண்டனிலிருந்து வெளிவரும் டெய்லி மெயில் இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2000 ம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப் 02

## இலங்கையை அதிர்ச்சியடைய வைத்த நேபாளம், பங்களாதேஷின் பதில்

ஜெனிவா, மார்ச் 15.

ஜெனிவாவில் ஆசிய நாடுகளின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நம்பிக்கை வெளியிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் நிலைப்பாடு இலங்கைக்கு அதிர்ச்சியைக் 02

## வடக்கில் 14 பேருக்கு தொற்று: 13 பேர் யாழ்ப்பணத்தவர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கு மாகாணத்தை சேர்ந்த 14 பேர் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 13பேர் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று 422 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். 02

## ஜீ.சி.ஈ. உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் பிற்போடப்பட்டன!

### பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

இந்த ஆண்டுக்கான புலமைப் பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்தப்படமாட்டாது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் சனத் பூஜித் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்று நோய் நெருக்கடியால் பாடசாலைகளில் பாடத் திட்டங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமையே இதற்குக் காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

கல்வி அமைச்சர், மாகாண கல்வி பணிப் 02

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு விரைவில் ஆணையாளர்கள் நியமனம்!

கொழும்பு, மார்ச் 15

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு புதிய ஆணையாளர்களை நியமிப்பதற்கான பரிந்துரை நீதி அமைச்சால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டதும் உரியர்வகளுக்கு இழப்பீடு வழங்கும் செயல்பாடு முன்னெடுக்கப்படும் இவ்வாறு நீதி அமைச்சர் எம்.யூ. எம். அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த அரசினால் நியமிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர்களின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதத்துடன் நிறைவடைந்தது. அதனால் புதிய ஆணையாளர்களை நியமிக்கும் பரிந்துரை நீதி அமைச்சால் ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் ஆணையாளர்களை உள்ளடக்கி அந்தப் பரிந்துரை ஜனாதிபதி 02

## மாணவர்களின் பேரணிக்கு தமிழ் அரசுக் கட்சி ஆதரவு!

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தவும், இலங்கை அரசின் இனவழிப்பு நடவடிக்கைகளை கண்டித்தும் வடக்கு - கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் பேரணி நடத்தவுள்ளனர். இவற்றை வலியுறுத்தி நாளை மறுதினம் 02

## ஜெனிவா பிரேரணையை வெற்றி கொள்வது கடினம்!

### வெளிவிவகார அமைச்சின் செயலர்

கொழும்பு, மார்ச் 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் பிரித்தானியா தலைமையிலான அனுசரணை வழங்கும் நாடுகளால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேர 02

## மோ.சைக்கிள் – பனையுடன் மோதி விபத்து: இளம் குடும்பஸ்தர்கள் இருவர் உயிரிழப்பு!

### மன்னாரில் நேற்று துயரச் சம்பவம்

மன்னார், மார்ச்.15

மன்னார்- மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்த வீதியூடாக மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை 02

## மதரஸா பாடசாலைகளையும் தடை செய்வதற்கு தீர்மானம்!

### அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச் 15

பொது கொள்கைக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள மதரஸா பாடசாலைகளை தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடிப்படைவாத கொள்கைகள் தோற்றம் பெறும் நிறுவனங்கள், அமைப்புக்கள் தொடர்ந்து செயல்பட ஒருபோதும் அனு 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## 13ஆவது....

"இலங்கையில் மீள்நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும், மனித உரிமைகளையும் மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான இந்தப் பிரேரணையை பிரித்தானியாவைத்தலைமையாகக்கொண்ட இணைத் தலைமை நாடுகள் கொண்டுவந்திருக்கின்றன. கனடா, ஜேர்மனி, மலாவி, மொன்டி நீக்றோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைத் தலைமை நாடுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்த புதிய பந்தி ஒன்று திருத்தப்பட்ட பிரேரணையில் இணைக்கப்பட்டுள்ளது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்வது என்ற தமது உறுதிப்பாட்டை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என இந்தப் பந்தியில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதில், "13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அமைவாக, அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதென்ற தமது உறுதிப்பாட்டை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கின்றோம். மீள்நல்லிணக்கத்தையும், மக்கள் அனைவரும் மனித உரிமைகளை முற்றாக அனுபவிக்கக்கூடியதாகவும், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது உள்ளிட்ட உள்ளூர் அதிகார அமைப்புக்களுக்கு அரசாங்கம் மதிப்பளிப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாகாண சபைகளும் சிறப்பாக இயங்குவதை உறுதிப்படுத்தும் வகையிலும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்" எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பிரேரணை முதல் தடவையாக மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்ட போது, 2009 மே 26 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகியோரால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை முன்னிலைப்படுத்தும் வகையிலான பந்தி ஒன்றும் பிரேரணயில் இணைக்கப்பட்டது. இலங்கையில் இறுதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் அபிவிருத்திக்குமாக அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. புதிதாக இணைக்கப்பட்ட அந்த பந்தி தற்போதைய தீர்மானத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. அப்படியே இடம்பெற்றுள்ளது.

தமிழ் முஸ்லிம் சிறுபான்மை இன மக்கள் தனிமைப்படுத்தப்படுவது, ஊடக சுதந்திரம் மீள நிலைநாட்டப்படுவது, போரில் இறந்தவர்களை பகிரங்கமாக நினைவுகூர்வதற்கான கட்டுப்பாடுகள், நினைவுச் சின்னங்கள் அழிக்கப்படுவது என்பன புதிய வரைபில் கவனத்துக்குரிய விடயங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம், இழப்பீட்டுக்கான செயலகம் என்பன சிறப்பாகவும், சுயாதீனமாகவும் செயற்பட்டு தமக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை இந்த தீர்மானம் வலியுறுத்தியிருக்கின்றது.

மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களுக்கான கண்காணிப்பை முடிவுக்குக கொண்டுவந்து அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் இத்தீர்மானம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது.

இலங்கையில் மீளநல்லிணக்கம், பொறுப்புக் கூறல் என்பவற்றை உள்ளடக்கியதாக மனித உரிமைகள் நிலைம குறித்து - கண்காணிப்பதையும், அறிக்கையிடுதலையும் மேம்படுத்த வேண்டும் எனவும் பிரேரணை வலியுறுத்தியிருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடரில் வாயமொழிமூலமான அறிக்கை ஒன்றும், 49 ஆவது கூட்டத் தொடரில் எழுத்துமூலமான அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட வேண்டும் எனவும் பிரேரணை வலியுறுத்துகின்றது.

51 ஆவது கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறலை மேலும் முன்னேற்றமடையச் செய்யும் வகையில் திட்டங்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கை ஒன்று முன்வைக்கப்படும் எனவும் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த வாரத்தில் உறுப்பு நாடுகளுக்கு இடையே இடம்பெற்ற முறைசாரா சந்திப்பின்போது பிரேரணைக்கான திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரேரணை இறுதியாகப்பட்டு உறுப்பு நாடுகளுக்கு வெள்ளிக்கிழமை இரவு கொடுக்கப்பட்டது.

நாளை செவ்வாய்கிழமை இந்தப் பிரேரணை இறுதியாக்கப்பட்டு உத்தியோக பூர்வமான மனித உரிமைகள் பேரவையிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரியவருகின்றது. உறுப்பு நாடுகளிற்கு இடையே முறைசார சந்திப்புக்கள் இன்றும் நாளையும் இல்லை என்பதால் புதிய திருத்தங்களுக்கான வாய்ப்பு இல்லை எனத் தெரிகின்றது. இது தொடர்பான வாக்கெடுப்பு எதிர்வரும் 22 அல்லது 23 ஆம் திகதி இடம்பெறும்.

## இலங்கையை....

கொடுத்திருப்பதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை குறித்த பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது, தம்மால் வெற்றிபெற முடியாது என்பதை இலங்கை தெரிந்திருக்கின்ற போதிலும், அண்டை நாடுகளான ஆசிய நாடுகளின் ஆதரவைத் தக்கவைப்பதற்கான பகிரத இராஜதந்திர நகர்வுகளை இலங்கை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் நோபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது, "பிரேரணை எவ்வாறிருந்தாலும், இந்தியாவின் ஆலோசனையைப் பெற்றே எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்" என இரு நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கைக்குத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இலங்கை இராஜதந்திர மட்டத்தில் இது அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தியா வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதென்ற முடிவை எடுத்துவிட்டது. இந்த நிலையில் நேபளம், பங்களாதேஷ் ஆகியனவும் அதே நிலைப்பாட்டை எடுத்தால் அது இலங்கைக்கு பாரிய பின்னடைவாக இருக்கும். நெருங்கிய நட்பு நாடுகளின் ஆதரவைக் கூட பெற முடியவில்லை என்பது ஒரு இராஜதந்திரத் தோல்வியாகவே கருதப்படும்.

## ஜீ.சி.ஈ. உயர்தரம்....

பாளர்கள் மற்றும் பிற அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்நிலையில், நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பல்வேறு தரப்பினருடன் ஆராய்ந்து இந்தப் பரீட்சைகளை நடத்துவதற்குரிய காலப்பகுதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## மே.சைக்கிள்....

யிழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

செட்டிக்குளத்துக்கு மரணச் சடங்கு வீட்டுக்கு சென்றுவிட்டு மீண்டும் மன்னார் நோக்கி வீடு திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த இருவரும் மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளை திருமணம் செய்த 36 மற்றும் 38 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மதரஸா....

மதிக்க முடியாது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஒரு சில முஸ்லிம் பெண்கள் அணியும் புர்காவை தடை செய்யும் அமைச்சரவை யோசனைக்கு கைச்சாத்திட்டுள்ளேன். ஒரு தரப்பி னரது அடையாளங்களை முடக்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

களுத்துறை ஸ்ரீ முனசிங்க போதி ராஜ விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைத்தபோதே மேற்கண்டவாறு அவர் சொன்னார். (ஐ)

## வடக்கில்....

சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 14 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில் 13 பேர் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

இவர்களில் 7 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதிகளாவர். ஏனையவர்களில் ஐந்து பேர் யாழ். மாநகர சபை மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்தவர்களாவர். இபோன்று ஒருவர் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்தவர். இவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்கள் என்பதுடன் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்களாவர்.

இத்துடன், வவுனியாவிலும் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். இவர், ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர் ஒருவரே இவ்வாறு இனங்காணப்பட்டார். இவர் வவுனியா பொது வைத்திசயசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் தொற்றாளராக அறியப்பட்டுள்ளார். (ஐ)

## காணாமல்....

யிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி உரிய நியமனங்களை வழங்குவார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் இடைக்காலத் தீர்வாக இழப்பீடு வழங்கும் பணி ஆணையாளர்கள் நியமனத்தின் பின் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ)

## புலிகள் மீதான....

பட்ட சுயாதீன அமைப்பான தடை செய்யப்பட்ட அமைப்புகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் இந்த உத்தரவை வழங்கியுள்ளதாக டெய்லி மெயில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இலங்கையில் 1978 இல் உருவாகிய இந்த பிரிவினைவாத அமைப்பு தற்கொலை அங்கியை உருவாக்கியது என சர்வதேச அளவில் கருதப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இந்த அமைப்பை 2001 இல் பிரிட்டன் தடை செய்தது.

எனினும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற இந்த அமைப்பு தடைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது. விடுதலைப் புலிகள் தற்போது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் பிரிட்டனில் பயங்கரவாதம் குறித்து ஆய்வு செய்துவரும் கூட்டு பயங்கரவாத ஆய்வு நிலையம் விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தினை இன்னமும் கைவிடவில்லை என்பதால் தடை தொடர வேண்டும் என தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளிற்கு எதிரான தடையை நீடிப்பதற்கான காரணங்களில் குறைபாடுகள் உள்ளதால் உள்துறை அமைச்சர் தடை குறித்து மீளாய்வு செய்யவேண்டும் என சுயாதீன அமைப்பான தடை செய்யப்பட்ட அமைப்புகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

தடையை நீக்குவதற்காக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

நாங்கள் சுயாதீன அமைப்பான தடை செய்யப்பட்ட அமைப்புகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர், அதுவரை விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகவே விளங்கும் என தெரிவித்துள்ளார்.

## இறைமையை....

செயற்பாடு என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கடும் சீற்றத்துடன் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை குறித்த பிரேணையின் இறுதி வரைபு கிடைக்கப்பெற்ற நிலையில், ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர், பிரேரணையின் உள்ளடக்கம் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும், நாட்டின் இறைமையை மீறுவதாகவும் அமைந்திருக்கின்றது எனத் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளில் ஒன்றாக உள்ள பிரிட்டன் இலங்கை விவகாரத்தில் நட்புக்கு விரோதமாகச் செயற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சாடினார்.

## ஜெனிவா....

ணையை வெற்றி கொள்வது கடினம் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சம்பந்தப்பட்ட நாட்டின் இணக்கத்தைப் பெறாது எத்தனை தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் எவ்விதமான பலனுமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேநேரம், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கே ஜனாதிபதி கோட்டாபய விரும்புகின்றார். அதற்காக அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு அவர்களுடன் விரைவில் சந்திப்புக்களை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு பயணத்தடைகளை விதிக்குமாறு கோரப்படுகின்றபோதும் ஐ. நா. பாதுகாப்புச் சபையிலேயே அது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் எனினும் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டால் சீனாவும், ரஷ்யாவும் எமக்கு ஆதரவளிக்கும் - என்றார். (ஐ)

## மாணவர்களின்....

புதன்கிழமை நடைபெறவுள்ள பேரணிக்கு தமிழ் அரசுக் கட்சி முழுஆதரவை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், "எம் தமிழினத்தின், தமிழர் தேசத்தின் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் தமிழினத்தின் எதிர்காலச் சந்ததி, இளைய சமுதாயத்தின் அர்ப்பணம்மிக்க செயல்பாடுகளுக்கு நாம் ஒன்றுபட்ட ஆதரவை வழங்குவோம்.

கடந்த மாதம் 3 முதல் 7ஆம் நாள் வரை அணிதிரண்ட மக்கள் பலத்தைப் பேண வேண்டும் - பலவீனமடைய விடக்கூடாது.

இந்நிலையில், தமிழ்த்தேசமக்கள் இலங்கையிலும், சர்வதேச அரங்கிலும் ஒரே குரலில் உயர்ந்த நிபுணத்துவப் பங்களிப்புடன் ஒன்றுபட்ட கட்டமைப்பில் செயல்படத் திடசங்கற்பத்துடன் உறுதி கொள்ள வேண்டும். அந்த வழியில் இடம்பெறும் அனைத்து ஜனநாயக செயல்பாடுகளையும் ஆதரிப்பதும் - ஈடுபடுவதும் இன்று அவசியம். எனவே, எதிர்வரும் 17ஆம் திகதி - புதன்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பை ஏற்று அப்பேரணி வெற்றிபெற நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் "- என்றுள்ளது. (ஐ - 3)

ஈழநாடு
Eelanadu
15.03.2021 திங்கட்கிழமை
சார்வரி, பங்குனி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இறுதி வரைவில் மீளவும் 13ஆவது திருத்தம்

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரின்போது, சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணையின் இறுதி வரைவு பேரவையில் சமர்க்கப்பட்டுவிட்டது. இனி இதில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பல அதில் இல்லாவிட்டாலும்கூட, தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட ரிபிள் ஐ.எம் (IIIM) எனப்படும் பொறிமுறையை முற்றிலுமாக இல்லாவிட்டாலும்கூட, ஓரளவு பிரதிபலிக்கக் கூடியவாறான விடயமொன்றும் பிரேரணையில் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. அதாவது, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் செயல்பாடொன்றை மனித உரிமைகள் பேரவையின்கீழ் முன்னெடுப்பதற்கான ஏற்பாடொன்றை பிரேரணை உள்வாங்கியிருக்கின்றது. மற்றும்படி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், பொருளாதாரத் தடை, பயணத்தடைகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள், இணைத்தலைமை நாடுகளால் கண்டுகொள்ளப்படவில்லை. இது ஏற்கனவே ஓரளவு எதிர்பார்க்கப்பட்ட விடயமும்கூட. ஆனாலும், தற்போதும் இந்தப் பிரேரணையை முற்றிலுமாக தோற்கடிக்கும் முயற்சியில் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் முழுமையாக முயன்றுவருகின்றது. இதனால் இணைத்தலைமை நாடுகள் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றன. தோற்கடிக்கப்படும் நிலைமை தென்பட்டால் பிரித்தானியா இதிலிருந்து பின்வாங்கிவிடும். பின்னர் தமிழர் நிலைமை இன்னும் மோசமாகிவிடலாம்.

பூச்சிய வரைவு வெளியான நாளிலிருந்து ஒரு விடயம் தொடர்ந்தும் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டுவந்தது. அதாவது, ஆணையாளரின் அறிக்கையிலும், பூச்சிய வரைவிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வலியுறுத்தப்பட்டவில்லை. ஆகக்குறைந்தது அரசியல் தீர்வென்னும் ஒரு பிரச்னை இருப்பதாகக்கூட பிரேரணையில் குறிப்பிடப்பட்டவில்லை. ரணில் - மைத்திரி அரசாங்கம் 2015இல் இணையனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டிருந்த 30-1 தீர்மானத்தில், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், இம்முறை இந்த விடயம் தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே எவரும் கண்டுகொள்ளவில்லை. உண்மையில் தாயகத்திலிருக்கும் பிரதான கட்சிகள் இதனை வலியுறுத்தியிருக்கவேண்டும் ஆனால், அவர்கள் எவரும் இது தொடர்பில் பேசவில்லை. ஆரம்பத்தில், மூன்று கட்சிகளும் இணைந்து இது தொடர்பில் கடிதமொன்றை ஆணையாளருக்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் அனுப்பப்போவதாக கூறியிருந்தபோதிலும்கூட, பின்னர் இடம்பெற்ற உள் அடிபிடி காரணமாக அந்த முயற்சி முளையிலேயே கருகிப்போனது. இந்த நிலையில் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு என்னும் விடயமொன்று இருக்கின்றது என்பதையே அனைவரும் மறந்து போயிருந்தனர். தமிழர்களே அதனை வலியுறுத்தாதபோது, இணைத்தலைமை நாடுகள் அதில் அக்கறை செலுத்தவேண்டுமென்று எவ்வாறு நாம் எதிர்பார்க்கலாம்!

ஆனாலும், தாராளவாத புலம்பெயர் அமைப்புக்கள் - முக்கியமாக, பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கிவரும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆரம்பத்திலிருந்தே இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்திவந்தது. இது தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்களின்போது, இம்முறை பிரேரணையில் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தும் யோசனையையும் பிரித்தானிய தமிழர் பேரவை முன்வைத்திருந்தது. ஆனால், அதனை ஒருசில புலம்பெயர் அமைப்புக்கள் ஏற்க மறுத்ததன் காரணமாக, புலம்பெயர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்வைத்த கோரிக்கைகளில் சமஷ்டி உள்வாங்கப்படவில்லை. ஆனாலும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் விளைவாக, இறுதி வரைபில் மீளவும் 13ஆவது திருத்தச் சட்டம் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. அண்மையில் இந்தியாவும், 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தங்களது உறுதியான நிலைப்பாட்டை பேரவையில் தெரிவித்திருந்த நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை இறுதி வரைவில் உள்வாங்குவதை கொள்கையளவில் இணைத் தலைமை நாடுகள் ஏற்றுக்கொண்டிருப்பதாக தெரிகின்றது. இதில் ஏதேனும் குறுக்கீடுகள் இல்லாவிட்டால், இறுதிவரைபில் தமிழர்களுக்கான அரசி யல் தீர்வு வலியுறுத்தப்படும்.

# யாழ்ப்பாணத்தில் இந்திய உயர் ஸ்தானிகர்

- அலசுவது **இராஜதந்திரி** -

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைமீதான பிரேரணையை பிரித்தானியா கொண்டுவருவதற்கு இன்னும் ஒருசில தினங்களே இருக்கும் தறுவாயில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வடக்கிற்கு விஜயம் செய்திருந்தார். அத்துடன், இலங்கையில் வடக்கு-கிழக்கு பிரச்னையை தீர்ப்பதற்கு அதிகார பரவலாக்கமே சிறந்த ஓர் அணுகுமுறையாக இருக்கமுடியும் எனவும் இந்திய உயர் ஸ்தானிகர் தம்மைச் சந்தித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தார். இதே வேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா தனது பங்களிப்பை வழங்கவேண்டுமெனவும் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருந்தார்.*

*இது இவ்வாறிருக்க, தமிழ்நாடு மாநில தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள தறுவாயில், திராவிட முன்னேற்ற கழகமும் (தி.மு.க.) தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை தமிழர் பிரச்னை குறித்து குறிப்பிட்டுள்ளது. தி.மு.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், இலங்கையில் வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு விரிவான அதிகார பரவலாக்கமே அவசியமானதாகின்றது எனவும் தெரிவித்துள்ளது.*

**முக்கிய அரசியல் சக்தி**

*இந்தியாவைப்பொறுத்தவரை, வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னையில் இந்தியா ஒரு முக்கிய அரசியல் சக்தியாகவே இருந்து வருகின்றது. ஏனெனில், 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு ஒரு தீர்வாக அமையும் விதத்திலேயே இலங்கையின் சிரேஷ்ட தமிழ் அரசியல் வாதிகள், இந்திய இராஜதந்திரிகள் ஆகியோரது ஆலோசனைகள், பரிந்துரைகளுக்கு அமைவாக கொண்டு வரப்பட்டிருந்தது.*

*எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கியத்துவத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட, அனைத்து தமிழ் அரசியல் தரப்பினரும் 1987ஆம் ஆண்டிலேயே நன்குணர்ந்து செயல் பட்டிருப்பார்களேயானால், இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே மாகாணமாக இணைந்த நிலையில், தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாஷைகள் பெரிதும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையே காணப்பட்டிருக்கும். ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு தூரநோக்கோடு அணுகுவதில் தமிழ் அரசியல் தரப்பு தவறியமையே இன்று 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்திற்காக இலங்கையிடமும் இந்தியாவிடமும் மண்டியிடவேண்டிய நிலைக்கு வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தரப்பை தள்ளியிருக்கிறது. யாழ்ப்பாணத்திற்கு இரு தினங்களுக்கு முன்னர் விஜயம் செய்திருந்த இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விரிவான அதிகார பரவலாக்கமே சிறந்த தீர்வாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ள நிலையில், இந்தியாவின் பங்களிப்பும் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதில் இன்றியமையாதாகின்றது.*


**இந்திய உயர் ஸ்தானிகர்**

*எனவே, வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் வாதிகள் இந்திய தரப்பினரை சந்திக்கும்போதும், இந்திய தரப்பினர் இலங்கையின் அரச தரப்பினரை சந்திக்கும்போதும் 13ஆவது அரசியல் அமைப்பின் அமுலாக்கம் குறித்து பேச்சளவில் மட்டுமே நின்று விடுகின்றனரே தவிர, நடைமுறையில் எதனையும் ஆக்கபூர்வமாக செயல்படுத்துவதில் முழுமையான பங்களிப்பை இந்திய தரப்பினர் வழங்குவதாக காணப்படவில்லை. யாழ்ப்பாணம் வந்திருந்த உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேகூட வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு விரிவான அதிகாரப்பரவலாக்கமே ஒரு சிறந்த தீர்வாக அமைய முடியும் என்ற இந்திய தரப்பின் பழைய பல்லவியைப் பாடிச்சென்றுள்ளதையே அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.*

*இலங்கையில் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டுவருவது குறித்து தற்போது பேசப்பட்டு வருகின்ற தறுவாயில், தற்போதைய அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டம் நீடித்து நிலைக்குமா என்பதுகூட சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது. அத்துடன், 13ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்படுவதுபோன்ற வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான அதிகார பரவலாக்கல் குறித்த அம்சங்கள் உத்தேச புதிய அரசியல் அமைப்பில் இடம்பெறுமா என்பதும்கூட கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.*

*ஆகவே, யாழ்ப்பாணத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே வடக்கு-கிழக்குக்கு அதிகார பரவலாக்கத்தின் அவசியத்தை தமக்கு முன்பிருந்த உயர் ஸ்தானிகர்கள் போலவே கூறுவதுடன் மட்டுமே தமது இராஜதந்திர ரீதியான பங்களிப்பை நிறுத்திக் கொள்ளாது, இந்திய அரச தரப்பின் முழுமையான பங்களிப்புக்கும் வழியமைக்கும் விதத்தில் தமது இராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை துரிதப்படுத்தவேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 15 திங்கட்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 2
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகுகாலம் : 7.30 - 9.00
திதி : சூன்ய




**மேடம்**
வெளிநாட்டு பயணத்துக்கு ஏற்பாடு செய்வீர்கள். நிம்மதி பிறக்கும்.பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். தேவையற்ற பயங்கள் நீங்கும்.உற்சாகமாக செயல்பட்டு வெற்றி இலக்கை எட்டுவீர்கள்.

**இடபம்**
பயணங்கள் அலைச்சல் தரும். கோபத்தைக் குறையுங்கள். தேக்கநிலை மாறித் தெளிவு பிறக்கும். முயற்சி வெல்லும். வளைந்து கொடுக்க வேண்டிய சூழலில் அனுசரித்துச் செல்வீர்கள்.

**மிதுனம்**
முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பரபரப்பான நாள். உங்களைவிட இளையவருடன் நட்பு கிடைக்கும். உறவினர், நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**கடகம்**
பல நாள் பார்க்க விரும்பிய ஒருவரின் சந்திப்பு இன்று அமையும். பல நாட்கள் முயன்ற வெற்றிக் கனியை எட்டிப்பிடித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் ஒருவரின் திருமணக்கனவு நனவாகும்.

**சிம்மம்**
தேவையற்ற பேச்சுக்களை அறவே தவிர்க்காவிட்டால் பிரச்னை வரும். வெற்றிக்கு கவனமுடன் செயல்படுவீர்கள். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த நபர்களின் உதவி எளிதில் கிடைக்கும். திருமண விஷயத்தில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். வீட்டில் சுபநிகழ்ச்சி நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்**
விரும்பிய வகையில் உங்கள் ஆசை ஒன்றைத் தீர்த்துக் கொள்வீர்கள். வருங்கால நலன் கருதி திட்டங்கள் வகுக்கும்போது நன்கு யோசியுங்கள். பலநாட்கள் முயன்ற வாய்ப்பு ஒன்று கைகூடும்.

**விருட்சிகம்**
மனதிற்கு இனிய சம்பவம் நடைபெறும். வாக்குவாதம் வேண்டாம். சுழன்று பணிபுரிந்து மேலதிகாரியின் பாசத்தைப் பெறுவீர்கள். வெற்றித் திட்டம் எளிதில் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
குடும்பத்தினர்கள் உங்கள் சொல்லிற்கு மதிப்புக் கொடுப்பர். நினைத்த நேரத்தில் நினைத்த விஷயத்தைச் செய்து முடிப்பீர்கள். விரும்பிய வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்**
வருங்கால நலன் கருதி சேமிக்கத் தொடங்குவீர்கள். பணவரவு உண்டு. சிறு பயங்கள் உண்டாகி இன்றே தீரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்**
மனதில் ஏற்பட்ட குழப்பத்திற்குத் தெளிவு பிறந்து நிம்மதி வரும். பயணங்களால் விருப்பங்கள் நிறைவேறும். பணவரவு கூடும். வருமானம் திருப்தி தரும். சகோதரர்களுக்கு உதவுவீர்கள்.

**மீனம்**
திட்டம் வகுத்து முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள். உங்கள் தவறால் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். அவசரமின்றிச் செயல்பட்டால் அதிகம் சாதிக்க முடியும்.

# ஆட்சி மாற்றத்துக்கு தமிழக மக்கள் தயார்

## உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்



சென்னை, மார்ச் 15

**மக்களிடம் பாராளுமன்றத் தேர்தலில் இருந்த எழுச்சி இப்போதும் இருப்ப தாகச் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதி தி.மு.க வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தி.மு.க இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் முதல் முறையாகச் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியிலும் போட்டியிடுகிறார்.

முன்னதாக அவர் தமிழகம் முழுவதும் பிரசாரத்திற்கு செல்ல உள்ளதால் போட்டியிட வாய்ப்பில்லை எனவும் கூறப்பட்டது. ஆனால் நேர்காணலில் உதயநிதி பங்கேற்ற நிலையில், அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், தொகுதியில் உதயநிதி நேற்று பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபட்டேன். முன்பு இருந்த அதே அளவு எழுச்சி இப்போதும் மக்களிடையே இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். உதயசூரியன்ஜெயிப்பதும்தி.மு.க. வெற்றி பெறுவதும்தான் எங்களின் முழக்கம். நீங்களே மக்களின் வரவேற்பைப் பார்த்திருப்பீர்கள். சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் மக்கள் நன்றாக வரவேற்கிறார்கள். இது கருணாநிதி இரண்டு முறை வெற்றி பெற்ற தொகுதி. மாவட்டச் செயலாளர் அன்பழகன்வெற்றி பெற்ற தொகுதி.

கடந்த ஆண்டு நவம்பர் மாதமே பிரசாரத்தைத் தொடங்கி விட்டேன். மக்கள் ஆட்சி மாற்றத்துக்குத் தயாராக உள்ளார்கள். தொகுதிக்குள் முழுமையாக சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்பேன். எல்லா வேட்பாளர்களும் எல்லாத் தொகுதிகளிலும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள்.

கண்டிப்பாகத் தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்வேன். பிற தொகுதிகளில் பிரசாரம் செய்ய புறப்படுகிறேன்- என்றார்.

# ஜனநாயகத்தை காக்க சர்வாதிகாரம் தேவை!

## பிரசாரத்தில் சீமான்!

சென்னை, மார்ச் 15

'குறைந்தபட்சம் ஜனநாயகத்தை காக்க அதிகபட்ச சர்வாதிகாரம் தேவை", என்று சீமான் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் நேற்று முன்தினம் இரவு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தி.முக.வும், அ.தி.மு.கவும் மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறது. எத்தனையோ தேர்தலை சந்தித்தும் மாறுதல் ஏற்படவில்லை. தொலைநோக்கு திட்டம் இல்லாததால் நம் சமூகம் முன்னேறாமல் உள்ளது. இந்திய அளவில் அதிக இளைஞர்களை கொண்ட இயக்கம் நாம் தமிழர் கட்சிதான். பொலிஸாருக்கு விடுமுறை அளிக்காததால் அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொலிஸாருக்கு விடுமுறை அளிக்கப்படும். கல்வியை மேம்படுத்துவோம். அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.

பொலிஸார் யார் என்றே தெரியாத அளவுக்கு மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றினால் குற்றங்கள் குறையும். சிங்கப்பூரில் போக்குவரத்து விதிமீறல்களில் 12 முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் பின் கடுமையான தண்டனை அளிக்கப்படுகிறது. குறைந்தபட்சம் ஜனநாயகத்தை காக்க அதிகபட்ச சர்வாதிகாரம் தேவைப் படுகிறது - என்றார்.

# 237 கிலோ தங்க நகைகள் சேலத்தில் கைப்பற்றப்பட்டன!

சென்னை, மார்ச் 15

தேர்தல் நிலை கண்காணிப்புக் குழுவினர் நடத்திய வாகன சோதனைகளில் ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 250.34 கிலோ நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு 42.53 கோடி ரூபா - நம் நாட்டு மதிப்பில் 106.3 கோடி ரூபா ஆகும்.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி (தனி) சட்டப் பேரவை தொகுதிக்கு உட்பட்ட தலைவாசலில் சேலம் - சென்னை 4 வழிச்சாலையில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் நிலை கண்காணிப்புக் குழுவினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, சென்னையில் இருந்து சேலம் நோக்கி வந்த வாகனத்தை சோதனையிட்டதில் ஆவணங்கள் இன்றி 250.34 கிலோ தங்க நகைகள் இருந்தன. இவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு சுமார் 36.57 கோடி இந்திய ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கூண்டுக்குள் பெரியார்!

சென்னை, மார்ச் 15

தமிழக சட்டப் பேரவை தேர்தலை ஒட்டி அரசியல் கட்சி தலைவர்களின் சிலைகள் துணிகளால் மூடிவைக்கப்படுகின்றன.

திருநெல்வேலியில் அண்ணா, எம்.ஜி.ஆர். சிலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகேயுள்ள பெரியார் சிலை மூடப்படவில்லை. இதுவரை நடைபெற்ற தேர்தல்களின்போதும் இச்சிலை மூடப்படவில்லை.

இந்நிலையில், இச் சிலையை மூடவேண்டும் என்று இந்து முன்னணியினர் கடந்த சில நாட்களுக்கு முன்கோரிக்கை விடுத்து போராட்டத்திலும் ஈடுபட்டனர். ஆனால், பெரியார் பொதுவான தலைவர் என்பதால் சிலை மூடப்படவில்லை என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அசம்பாவிதங்களை தடுக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பெரியார் சிலையைச் சுற்றி இரும்பு கூண்டு அமைக்கப்பட்டுள்ளது.



## வடக்கு மாகாண காணி ஆவண விவகாரம்:

# திணைக்களம், அமைச்சர் முரண்பட்ட தகவல்கள்!

கொழும்பு, மார்ச் 15

**வடக்கு மாகாணத்தின் காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டன என்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் வடக்கு வலய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், இந்த ஆவணங்கள் தமக்கு கிடைத்துள்ளன என்று வட மத்திய வலய பிரதி பணிப்பாளர் டபிள்யு.எம்.பண்டார உறுதிப்படுத்தியுள்ளார்.**

ஆனால், காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரான எஸ்.எம்.சந்திரசேன யாழ். அலுவலகத்தில் இருந்து ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை என்று முரண்பட்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து காணி ஆவணங்கள் இரவோடிரவாக அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் திணைக்கள அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் கேட்கப்பட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதுபற்றி மேலும், தெரிய வருவதாவது:

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களினதும் காணி ஆவணங்களும் யாழ்ப்பாணத்திலேயே இருந்தன. இதில் யாழ். மாவட்டத்திற்குரிய ஆவணங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களின் ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டன என்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் வடக்கு வலய பணிப்பாளர் கூறினார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரமே ஆவணங்கள் அனுப்பப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் தமது அலுவலகத்திற்கு கிடைத்தமையை காணி ஆணைக்குழுவின் வட மத்திய வலய பிரதி பணிப்பாளர் டபிள்யூ. எம். பண்டார உறுதிப்படுத்தினார்.

அத்துடன், போர் இடம்பெற்ற காலத்தில் இந்த ஆவணங்கள் அநுராதபுரம் அலுவலகத்திலேயே இருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்னரே அவை யாழ். அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டன எனவும் அவர் சொன்னார்.

இது தொடர்பில் காணி அமைச்சர் எஸ். எம். சந்திரசேன



கூறுகையில்,

யாழ். அலுவலகத்தில் இருந்து ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை. எனினும், அநுராதபுரம் அலுவலகத்தில் உத்தியோகத்தர்கள் அதிகம் இருப்பதனால், மக்களுக்கான சேவைகளை துரிதப்படுத்துவற்காக இந்த முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனால், வட மாகாண மக்களை சிரமப்படுத்த தாம் விரும்பவில்லை. எது எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் தான் தொடர்ந்தும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ஐ)



# பண்ணை கடற்கரையில் பொலிஸார் சிரமதானம்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

பிளாஸ்ரிக் மற்றும் கழிவுகள் நிறைந்திருந்த பண்ணை கடற்கரை பகுதியை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தினர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் லியனகேயின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸார் இந்த சிரமதானத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் பகுதியில் நீண்ட காலமாக பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டு அசுத்தமாகக் காணப்பட்டது. இதனை, அவதானித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸாருக்கு விடுத்த பணிப்புரையின் பேரில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சிரமதானப் பணியில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ-3)

# வடமராட்சியில் கைதானவரிடம் 21 சைக்கிள்கள் மீட்கப்பட்டன!

வடமராட்சி, மார்ச் 15

வடமராட்சியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியபோது கைதானவரிடம் இருந்து 21 சைக்கிள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

பருத்தித்துறை சிவன் கோவில் வளாகத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய 23 வயது இளைஞர் ஒருவரை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரிடம் இருந்து 21 சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றினர். அந்த சைக்கிள்கள் பருத்தித்துறையின் பல இடங்களிலும் திருடப்பட்டவை என்று தெரிய வந்தது.

கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் திருட்டுக் கொடுத்தவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வந்து அந்த சைக்கிள்களை அடையாளம் காட்ட முடியும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# பொலிஸாரை மோதிவிட்டு தப்பினார் மோ.சைக்கிள்தாரி

## பொலிஸ் உத்தியோகத்தர் காயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

வேகமாக வந்த மோட்டார்சைக்கிளை வழிமறித்த வீதிப் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தரை மோதித் தளிவிட்டு தப்பி சென்றுள்ளார் மோட்டார்சைக்கிள்தாரி.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மானிப்பாயில் இடம்பெற்ற சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மானிப்பாய் நகரில் வீதிப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், வேகமாக வந்த மோட்டார் சைக்கிள்தாரியை வழிமறித்துள்ளார்.

ஆனால், அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது வழிமறித்தவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றார். இதில் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் கால் முறிந்து காயத்திற்கு உள்ளானார். காயமடைந்த உத்தியோகத்தர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)



# நெத்தலியாறில் மணல் திருட்டு: தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி கல்மடுக் குளம் - நெத்தலியாறு ஆற்றுப்பகுதியில் கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக சட்டவிரோத மணல்அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதைத் தடுக்க அதிகாரிகள் உதவ வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆற்றுப் பகுதியில் தொடர்ந்து இடம்பெறம் மணல் அகழ்வால் 66 அடி ஆழமாக இருந்த ஆறு சில நூறு அடி ஆழத்துக்கு சென்றுவிட்டது என்றும் இந்த ஆற்றுப்பகுதியில் மரங்களும் அழிக்கப்படுகின்றன எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தமது மூதாதையர் காலம் தொட்டு இந்த ஆறு இருந்து வருகிறது எனவும் இந்த ஆற்றுப்பகுதியில்இடம்பெறும்சட்டவிரோத செயல்பாடுகளை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், பொலிஸாரையும் கோரியுள்ளனர். (ஐ)

# விடத்தற்பளை முகாமிலிருந்து 155 பேர் தனிமைப்படுத்தல் முடித்து வெளியேறினர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

டுபாயிலிருந்து வந்து விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 155 பேர் நேற்று முன்தினம் வீடு திரும்பினர். இவ்வாறு வெளியேறியவர்கள் களுத்துறை, மொனறாகலை, அம்பாறை, மாத்தறை, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களை சேர்ந்தவர்களாவார்.

52ஆவது படையணி மற்றும் 522ஆவது காலாட்படைக்கு உட்பட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தே இவர்கள் வீடு



திரும்பினர். இவர்கள் வீடு திரும்புவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளையும் மற்றும் சிற்றுண்டிகள், மதிய உணவு, குடிநீர் போன்ற வசதிகளையும் இராணுவத்தினர் ஏற்பாடு செய்து வழங்கியிருந்தனர். படைகளின் தளபதியும் கொவிட்-19 தடுப்பு மையத்தின் பிரதானியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் எண்ணக்கருவிற்கு அமைய படைகளின் (யாழ்ப்பாணம்) கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் மேற்பார்வையின் கீழ் இந்த தனிமைப்படுத்தல் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ -3)

# கொவிட் தடுப்பூசி இறக்குமதியில் தனியார் துறையினருக்கு அனுமதி

## கொவிட் தடுப்பூசி குழுவின் தலைவர் தகவல்

கொழும்பு மார்ச் 15.

கொவிட் தடுப்பூசி இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்து பாதுகாப்பான முறைமையின் கீழ் தனியார் துறையினருக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக கொவிட் தடுப்பூசி கொண்டுவருதல் தொடர்பிலான குழுவின் தலைவர் ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரத்துங்க தெரிவித்தார்.

கொவிட் தடுப்பூசியை கொண்டுவருவதற்கான அனுமதி தொடர்பில் தனியார் நிறுவனங்கள் கடந்த நவம்பர் மாதம் கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில், அரசு இவ்வருடம் ஜூன் மாதம் ஆகும் போது அந்த வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படும் என தெரிவித்திருந்தது.

இலங்கையில் முன்னெடுக்கப்படு வரும் கொவிட் தடுப்பூசி வழங்கும் திட்டத்திற்கு அமைய அரசு இலவசமாக மேற்கொண்டு வருகின்றமையால் குறித்த விவகாரத்தில் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. ஆகவே தான் அரசாங்கம் இந்த முறைமையை மேற்கொண்டு வருகின்றது.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் ரகத்திலான 70 இலட்சம் தடுப்பூசிகளை நாட்டிற்கு கொண்டுவருவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும் கூட இந்த தடுப்பூசிக்கான அனுமதியை உலக சுகாதார ஸ்தாபனம் இன்னமும் கூட வழங்கவில்லை என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்திருக்கின்றார்.

அந்த தடுப்பூசிக்காக ஒரு கோடி அமெரிக்க டொலர் வரையில் செலவிட நேரிடும். ஆனால், இந்திய தயாரிப்பான அஸ்ரா செனிகா தடுப்பூசிக்கு 50 இலட்சம் ரூபாவாகும் ரூபாவாகும். ஆகவே ரஷ்யாவினுடைய தடுப்பூசி தொடர்பில் ஆராய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் திலுஸ தசநாயக்க தெரிவித்தார்.

இந்தியாவின் சேரம் நிறுவனத்தின் பிரச்சினை இன்னமும் தீரவில்லை இருப்பினும், அரசாங்கத்திற்கு கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப அந்த நிறுவனம் தடுப்பூசிகளை வழங்கும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

மேலும், இலங்கையில் ஒரு கோடி 30 இலட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசியை வழங்க கூடிய நிலைமை உள்ளது. அதில் இதுவரையில் 12 இலட்சத்து 64 ஆயிரம் பேருக்கே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

குறைந்தது 70 வீத மக்களுக்கேனும் இந்த தடுப்பூசியை வழங்குவதன் ஊடாகவே கொவிட் தொற்றை மேலும் கட்டுப்படுத்தகூடியதாக விருக்கும் என லலித் வீரதுங்க தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# பண்டாரம் வன்னியனார் வரலாற்று நூல் வெளியீடு

வவுனியா, மார்ச் 15

வரலாற்றாய்வாளர் அருணா செல்லத்துரையின் "பண்டாரம்-வன்னியனார்" ஆய்வு நூலின் வெளியீட்டுவிழா வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாழ்த்துரையை தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி க. சுவர்ணராயா நிகழ்த்தினார்.

நூலை சட்டத்தரணி சிற்றம்பலம் வெளியிட்டுவைக்க அதன் முதல்பிரதியை வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் வீ.ஜெகசோதிநாதன் பெற்றுக்கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரையை புளியங்குளம் ஆசிரியர் வாண்மைவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் நிகழ்த்தியிருந்தார். (ஐ)

# பழைய மாணவர் சங்க நிர்வாகம் தெரிவு

வவுனியா, மார்ச் 15

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தெரிவு நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் சங்கத்தின் புதிய தலைவராக ஏற்கனவே தலைவராக பதவிவகித்த ரி.தயாபரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக ரி.கோபிநாத், பொருளாராக லிங்காதரனும், உப செயலாளராக இ. சற்சொரூபன், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக ந.கபிலநாத், ரூபன், என்.டன்சன், எம். ஜீவகுமார், சபேசன், ரி.யசோதரன், ரி.ராஜ்குமார், எஸ். புவீந்திரன் ஆகியோர் தெரிவாகினர். (ஐ)

## சுதந்திரக் கட்சியினர் சந்திப்பு

முல்லைத்தீவு, மார்ச் 15

வன்னி மாவட்டத்துக்கு சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களை நேற்று புதுக்குடியிருப்பில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, பிரதேச மட்டங்களிலும் கட்சி ரீதியிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பிலும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கட்சி என்ற ரீதியில் முன்னோக்கி செல்வது என்றும், பிரதேச மக்களின் பிரச்னை தீர்வு தொடர்பிலும் பேசப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ)

# உயிர்த்த ஞாயிறு விசாரணை அறிக்கையில் பல விடயங்கள் குழப்பமானதாக உள்ளன!

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு மார்ச் 15.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையில் பல விடயங்கள் குழப்பமாக உள்ளன. அவ்வாறே அதில் உள்ள சில பரிந்துரைகள் நேர்மறையானவையாகும்" என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நல்லாட்சி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை தற்போது பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிலும் குறித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சில நேர்மறையானவையாகவுள்ளன என்ற கருத்துக்களும் துறைசார் நிபுணர்களினால் முன்வைக்கப்பட்டுவருகின்றது. அரச உயர் பதவியில் உள்ள ஒருவர் ஏனைய பதவிகளை வகிக்க முடியாது என்ற விடயம் அதில் பிரதானமானதாக கருதப்படுகின்றது.

ஏனெனில், ஆணைக்குழு அறிக்கையில் நல்லாட்சி அரசாங்கத்தில் பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய ஹேமசிறி பெர்னாண்டோ குறித்த பதவிக்கு மேலதிகமாக 4 உயர் பதவிகளை வகித்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி வரை பாதுகாப்பு செயலாளராக ஹேமசிறி பெர்ணாண்டோ கடமையாற்றியுள்ளார். அதற்கு மேலதிகமாக ஜனாதிபதி நிர்வாகக்குழு பிரதானியாகவும், சிறிலங்கா முதலீட்டு வாரியத்தின் தலைவராகவும், பீப்பிள்ஸ்லீசிங் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட நான்கு உயர் பதவிகளை வகித்துள்ளார்.

இவ்வாறாக பல உயர் பதவிகள்வழங்கப்பட்டுள்ளமையினால் அவரால்அவருடைய பதவிக்குரிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாத நிலைமை காணப்பட்டுள்ளது. ஏனெனில் நாட்டினுடைய பாதுகாப்பு செயலாளர் பதவியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிலையில் அவருக்கு வேறு உயர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில் தகுந்த முறையில் குறித்த பதவிக்கான கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை. என்றவாறாக கருத்துக்களும் வாக்குமூல பதிவுகளின் போது சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இவ்வாறாக பதவிகளை வழங்கியுள்ள ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என கூறிவிடமுடியாது. ஏனெனில் சிறிமாவோ பண்டாரநாயக்க, டீ.பீ.விஜயதுங்க, ரணசிங்க பிரேமதாச, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோரின் காலத்திலும் இவ்வாறான தவறுகள் இடம் பெற்றுள்ள. ஏனெனில்ஒரு நபரை உயர் பதவிகள் பலவற்றில் நியமிக்கும் போது எதற்கு முதலிடம் கொடுப்பது என்ற சிக்கல்நிலைமை தோன்றும் வாய்ப்புக்கள் உள்ளன.

இருப்பினும் இதனை ஒரு காரணமாக கூற முடியாது. அரச தலைவர் ஒரு குறித்த நபரை பதவியில் நியமிக்கும் போது குறித்த நபர் அந்த சேவையை சரிவர நிறைவேற்றுகின்றாரா என்பது தான் இதில் உள்ள சிக்கல் நிலைமையாகும். ஏனெனில் 2019 ஆம் ஆண்டு ஏப்பரல் 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறவுள்ளமை தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் ஹேமந்த உள்ளிட்ட உரிய பாதுசார் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் இதில்முக்கிய பிரச்னையாகும். ஏனெனில் குறித்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் அவதானம் செலுத்தாமைக்கு அவருடைய வேலைப்பழுவும்கூட காரணமாக இருக்கலாம்.

ஆனால் இறுதியில் நேர்ந்தது 200 இற்கும் அதிகமானோர் இறந்தும் பலர் படுகாயமடைந்தும் அங்கவீனமடைந்தும் முடக்கப்பட்டுள்ளமை யேயாகும். அத்துடன், குறித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் வாதபிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அறிக்கையின் பரிந்துரைப்படி அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை வகிக்க முடியாது என்ற விடயம் முக்கிய மானதாக அமைந்துள்ளது" என அவர் தெரிவித்தார்.

## - மன்னாரில் தனிமைப்படுத்தப்பட்டு -

# உலருணவு கிடைக்காதவர்களை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

மன்னார், மார்ச் 15

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் கொவிட்-19 தொற்று காரணமாக சுய தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும்திட்டம்தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது என்று மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் மன்னார் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்படுபவர்களின் தேவைகள் தொடர்பாக உரிய கிராம அலுவலர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அவர்களின் வீட்டுக்கு கிராம அலுவலர்களால் உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த வருடத்தில் இது வரை 210 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு உலர் உணவு பொருட்கள் கிடைக்காதிருப்பின் கிராம அலுவலர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார்.

மேலதிக தொடர்புகள் அல்லது முறைப்பாடுகள் இருப்பின் 023-222 2238 என்ற தொலைபேசி இலக்கம் ஊடக மன்னார் நகர பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)



# சர்வதேச விமான நிலையமாக மட்டக்களப்பு விமான நிலையம்

## சாணக்கியன் கோரிக்கை

திருகோணமலை, மார்ச் 15

மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரையும் முக்கிய உறுப்பினர்களையும் நேற்று முன்தினம் திருகோணமலையில் சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதன்மூலம் அதிகாரப் பரவலாக்கலை அமுல்படுத்த வேண்டும் எனவும் இதன்மூலம் காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு நாமே தீர்வைப் பெற முடியும் என்பது தொடர்பாகவும் சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தகவல் தொழில்நுட்ப துறையை வடக்கு - கிழக்கில் நிறுவுவதற்கான பரிந்துரையையும் சாணக்கியன் இந்தச் சந்திப்பின் போது முன்வைத்திருந்தார்.

இதன் மூலம் பல இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க முடியும்.

அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் காங்கேசன்துறை போன்ற இடங்களில் துறைமுகங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# கொவிஷீல்ட் தடுப்பூசி பெற்றவர்களில் 30 பேருக்கு குருதி உறைதல் பாதிப்பு!

## பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்



கொழும்பு, மார்ச் 15

**கொவிஷீல்ட் தடுப்பூசி பெற்றவர்களில் 30 பேருக்கு குருதி உறைதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பதிவாகியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் ஏற்படும் சிக்கல் நிலைமைகள் குறித்து, சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நாடு முழுவதும் சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் கொவிட்-19 நோயை தடுப்பதற்காக கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் சில ஒவ்வாமை தன்மைகள் குறித்து அறிக்கையிடப்படுகின்றன. குறிப்பாக இலங்கையிலும் தடுப்பூசி பெற்றுக் கொண்டதன் பின்னர், குருதி உறைதல் ஏற்பட்ட 30 பேர் தொடர்பில் தகவல் பதிவாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக காய்ச்சல் மற்றும் உடல் வலி போன்ற நிலைமைகளே காணப்படுகின்றன. அவை சாதாரணமானவை என தொற்றுநோய் விஞ்ஞான பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பதிவாகியுள்ள பாதிப்பு எண்ணிக்கையானது, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்தளவானது என்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய மேலும் தெரிவித்தார். (ஐ)

# 20,000 இளம் முயற்சியாளருக்கு இந்த வருடத்துக்குள் காணிகள்!

கொழும்பு, மார்ச் 15

20,000 இளம் முயற்சியாளர்களுக்கு இந்த ஆண்டுக்குள் காணிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது இளம் முயற்சியாளர்களுக்காக ஓர் இலட்சம் காணி அலகுகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் முதல்கட்டம் என காணி அமைச்சின் செயலாளர் ஆர். ஏ. ஏ. கே. ரணவக்க தெரிவித்தார்.

காணி அலகுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் 4 இலட்சத்து 35 ஆயிரம் இளம் முயற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களில் தெரிவுசெய்யப்பட்ட முயற்சியாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் தற்போது நடந்து வருகின்றன. இவை, எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளன. விவசாயம், கால்நடை வளர்ப்பு, நுண் தொழில் முயற்சி மற்றும் தேசிய உற்பத்திகள் உள்ளிட்ட முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு காணிகளை வழங்குவதே அரசின் நோக்கமாகும்.இதற்கிணங்க, எதிர்வரும் ஜூன் மாதம் முதல் காணிகளை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கப்படும் - என்று அவர் குறிப்பிட்டார். (ஐ)

### ஜூலை முதல் நாடு முழுவதும் புதிய பிறப்பு சான்றிதழ் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 15

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நாட்டில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் புதிய பிறப்பு சான்றிதழை வழங்குவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, ஒருவர் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான அனைத்துத் தரவுகளும் கணனிமயப்படுத்தப்படவுள்ளதாக பதிவாளர் நாயகம் டபிள்யூ. எம். எம். டி. வீரசேகர தெரிவித்துள்ளார்.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில், தற்போது காணப்படும் பிறப்புச் சான்றிதழை புதுப்பித்து புதிய சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக பதிவாளர் நாயகம் கூறியுள்ளார்.

# கடலலை இழுத்து சென்றவர்களை காப்பாற்ற சென்ற இளைஞர் பலி!



கொழும்பு, மார்ச் 15

கடல் அலை இழுத்துச் சென்ற பெண்ணையும் அவரின் குழந்தையையும் காப்பாற்றச் சென்ற இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

களுத்துறை - கெலிமோ கடற்கரையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மத்துகம - களுபஹன என்ற இடத்தை சேர்ந்த உதய குமார என்ற 31 வயதான இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த சனிக்கிழமை மாலை நண்பர்களுடன் குளிப்பதற்காக அந்த இளைஞர் சென்றிருந்தார். அவர் புகைப்படங்களை எடுத்துக் கொண்டிருந்தபோது, கடல் அலை சிறுவன் ஒருவருடன் நின்றிருந்த பெண்ணை இழுத்துச் செல்வதை அவதானித்தவர் அவர்களை காப்பாற்றியுள்ளார்.

அச்சமயம் திடீரென வந்த பெரிய அலையால் அவர் அடித்துச் செல்லப்பட்டார். எனினும், அங்கிருந்தவர்கள் அவரை காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும் அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 15

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வரும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் வாரத்தில் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்படவுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேடமாக கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டு நாட்டுக்கு வரும் இலங்கையர்களை அவர்களின் வீட்டில் சுயதனிமைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் காலப் பகுதியில் மற்றும் நாட்டுக்கு வரும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைமை தொடர்பில் இந்த புதிய சுகாதார வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்படவுள்ளது.

இதேவேளை, நாட்டிலிருந்து குறுகிய காலத்துக்காக வெளிநாடு சென்று மீண்டும் நாட்டுக்கு வருபவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய வழிகாட்டுதல்கள் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் விசேட அரச பயணங்கள், உத்தியோகபூர்வ பயணங்கள் மற்றும் வர்த்தக ரீதியான பயணங்களின் பின்னர் நாட்டுக்கு வருபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ)

# தேசியக் கொடி அவமதிப்பு விவகாரம்: இலங்கை தூதரகம் அமேசனுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 15

இலங்கை தேசியக் கொடியின் உருவத்தை வரவேற்பு விரிப்புகள், மற்றும் செருப்பில் பயன்படுத்தியமை தொடர்பில் வெளியான செய்திகள் குறித்து அமெரிக்காவிலுள்ள அமேசன் நிறுவனத்துடன் பேசுவதற்கு அங்குள்ள தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வணிகம் அல்லது அலங்கார நோக்கங்களுக்காக தேசியக் கொடியின் படத்தைப் பயன்படுத்துவது இலங்கை அரசின் அறிவுசார் சொத்துரிமைகளை மீறுவதாகும் என்றும் தூதரகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இணைய வர்த்தக தளங்களிலிருந்து சம்பந்தப்பட்ட பொருட்களை உடனடியாக அகற்றுமாறு தூதரகம் அமேசன் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்தது.

மேலும், தூதரகம் அமெரிக்க வர்த்தகத் துறை, அமெரிக்க வர்த்தக பிரதிநிதியின் அலுவலகம் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறையின் தொடர்புடைய பிரிவுக்கு நிலைமையை தெரிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயத்தில் தூதரகம் முன்னேற்றங்களை கண்காணித்து வருகிறது. தவிர, ஒன்லைனில் அந்தந்த தயாரிப்புகளின் வர்த்தகத்தை நிறுத்தும் நோக்கில் அமேசன் நிறுவனம் மற்றும் தொடர்புடைய அமெரிக்க அரசாங்க அதிகாரிகளுடன் ஈடுபட தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு





# உயிர்த்த ஞாயிறு தாக்குதல், நவாலி தேவாலய குண்டுவீச்சு ஏனைய குற்றங்களுக்கான நீதி

ருக்கி பெர்னாண்டோ

ஏப்ரல் 21, 2019 அன்று நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கான நீதி கோரி, அதற்கடையாளமாக, கடந்த மார்ச் 7 ஆம் திகதி, ஞாயிறன்று தேவாலயத்திற்கு செல்லும் போது கொழும்பு திருச்சபைக் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துக் கத்தோலிக்கர்களும் கறுப்பு உடை அணிந்து கொண்டு தேவாலயத்திற்கு சென்றிருந்தனர். பெப்ரவரி 28 அன்று இரத்மலானை, புனித ஜோசப் தேவாலய திருப்பலி பூசையின் போது எங்களது பரிஷ் மதகுரு அறிவித்தார். இது ஒரு அரசியல் நடவடிக்கையல்ல, ஆனால், நீதிக்கான ஒரு தேடல் என அவர் வலியுறுத்தினார். அதன் பின், ஏனைய கத்தோலிக்கர்கள் மற்றும் ஊடகங்கள் மூலமாக வும் ஞாயிறு ஒரு ‘கறுப்பு ஞாயிறு’ தினமாக அனுஷ்டிக்கப்பட்டதாக நான் அறிந்து கொண்டேன்.

கடுவாபிட்டி கத்தோலிக்க தேவாலயத்தில் சுமார் 115 பேர், கொச்சிக்கடை கத்தோலிக்க தேவாலயத்தில் சுமார் 50 பேர், மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் சுமார் 30 பேர்கள் மற்றும் இரண்டு சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல்கள் உட்பட மேலும் பல இடங்களில் மேலுமொரு 66 பேர்கள் என உயிர்ப்பலி எடுத்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று ஏறத்தாழ இரண்டு வருடங்களாகிவிட்டன. இத்தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் அவர்களின் இனத்துவத்தால் (முஸ்லிம்) மற்றும் மதத்தினாலும் (இஸ்லாம்) அநேகம் இனங்காணப்பட்டனர். எனினும், அப்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ் மா அதிபர் உட்பட பலர் மீது சந்தேகத்தின் சாயல் படர்ந்துள்ள போதிலும் கூட அச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் அதேபோன்று இந்தத் தாக்குதல்களைத் தடுத்திருக்கக் கூடிய உயர் மட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் யாவர் என இன்னமும் முடிவு செய்யப்படாமல் உள்ளனர்.

உயிர்த் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நீதிக்காக ஆதரவு தேடியவர்களுள் மிகவும் முக்கியமானவர் கொழும்பு கத்தோலிக்கப் பேராயர் மல்கம் கர்தினல் ரஞ்சித் அவர்களாவர். புலன்விசாரணைகள் மற்றும் நட்டஈடு வழங்குதல் நோக்கிய முன்னைய அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு அவரது முயற்சிகள்பங்களித்தன.

தாக்குதல்கள் நடைபெற்று ஒரு மாதத்தின் பின் ஒரு பல் தரப்பு நாடாளுமன்றக் குழு ஸ்தாபிக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. செப்டெம்பர் 2019 இல், தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி ஒரு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினை உருவாக்கினார். இரண்டு இடைக்கால அறிக்கைகள் மற்றும்ஓர்இறுதி அறிக்கை என்பனமுறையே டிசம்பர் 2019, மார்ச் 2020 மற்றும் பெப்ரவரி 2021 காலப்பகுதிகளில் தற்போதைய ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. ஆனால், அவை வெளியிடப்படவில்லை. இதை விடத் தனியாக, பொலிஸ் புலன் விசாரணைகள் பல நூறு பேர்கள் கைது செய்யப்படுவதற்கு வழிவகுத்தது, அவர்களுள் சிலர் விடுவிக்கப்பட்டனர், சிலர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். எனினும், எவரொருவருக்கும் எதிராக முறையாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் அவை தாக்கல் செய்யப்பட்டதாக நான் அறிக்கைகள் எதனையும் காணவில்லை. ஒரு சில மாதங்களினுள்ளேயே, தாக்குதலில் உயிரிழந்த ஒருவருக்கு ரூ.1 மில்லியன் வீதம், இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கான நட்ட ஈடாக ரூ. 262 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையை அரசாங்கம் கொடுப்பனவு செய்தது. மேலதிகமாக இரண்டு கத்தோலிக்கத் தேவாலயங்களை மீளமைப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ரூ. 20 மில்லியன்களும் மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திற்கு ரூ. 5 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மேலதிகமாக, கத்தோலிக்க மக்களால் நட்டஈடு வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் இடம்பெறுகின்றன. கட்டுவாபிட்டிய தேவலாயத்திற்கான விஜயத்தின்போதும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியளிப்போர்களுடனான ஒரு கலந்துரையாடலின்போதும், காயமடைந்தவர்களுக்கான மருத்துவ உதவி, ஒவ்வொரு குடும்பத்திற்குமாக அர்ப்பணிப்புடன் கூடியதான உளவளத்துணை அணிகள், பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள் மற்றும் மத சேவைகள் என்பவற்றை கத்தோலிக்கத் தேவாலயங்களின்உதவிகள்உள்ளடக்கியிருந்ததை நான் அறிந்து கொண்டேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களிற்காக ஞாபகார்த்த சின்னங்கள் பாதிக்கப்பட்ட இரண்டு தேவாலயங்களிலும் ஒரு சில மாதங்களினுள்ளேயே நிர்மாணிக்கப்பட்டதுடன், குண்டுத்தாக்குதல்களின் முதலாம் வருட ஞாபகார்த்த நினைவேந்தலுக்கு கொழும்பு பேராயரினால் விரிவான ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டன. இந்த ஏற்பாடுகளுக்கு அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்டது. ஞாபகார்த்த நிகழ்வுகள் கொவிட் - 19 நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டது, ஆனாலும், அரச தொலைக்காட்சிகள் உட்பட பரந்தளவில் ஊடக கவனத்தைப் பெற்றதுடன் தேசியளவில் ஒளிபரப்பப்பட்டன. தற்போதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல அரசியல் தலைவர்கள் உயிர்த் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கான நீதியை உறுதிப்படுத்துவதில் தங்களது பற்றுறுதியை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். நீதி இன்னமும் வழங்கப்படாத போதிலும், இவை உயிர்பிழைத்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மதிப்பளிக்கும் முக்கியமான உத்தரவாதங்களாகும். இது போதுமானதாக இல்லாதிருந்தாலும் தசாப்தங்களுக்கு முன்னர் புரியப்பட்ட கடுமையான குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கான நீதி, ஏற்றுக்கொள்ளுதல், நினைவுகூரல்கள், நஷ்ட ஈடு மற்றும் ஏனைய வகையிலான நஷ்ட ஈடு என்பவற்றுக்கான இலங்கையின் மோசமான தராதரங்களுடன் ஒப்பிடுகையில், இரண்டு வருடங்களினுள் இது ஒரு முக்கியமான முன்னேற்றமாக கருதப்பட முடியும்.



### யாழ்ப்பாணத்தில் நவாலி தேவாலயம் மீதான குண்டுவீச்சு, 1995

யுத்தத்தின் போது தேவாலயங்களில் தாக்குதல்கள் மற்றும் கொலை செய்தல் என்பன சாதாரணமானவையாக இடம் பெற்றிருந்தன. இவற்றுள் மிகவும் கொடூரமான நிகழ்வுகளில் ஒன்று, 1995 இல் யாழ்ப்பாணத் திருச்சபையின் நவாலி கத்தோலிக்கத் தேவாலயம் மற்றும் அதன் அண்டிய பகுதிகள் மீதான

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நிகழ்ந்த பின் இரண்டு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் நீதியை நாடுவதில் உள்ள மட்டுப்பாடுகள், பின்னடைவுகள் மற்றும் சவால்கள் என்பவற்றை கர்தினால் அடையாளம் கண்டுள்ளார். நீதி என்பது, கத்தோலிக்க நம்பிக்கைக்கு மையப் பகுதியானது என்பதுடன், குறைந்தது இப்பொழுதாவது, சிங்கள மற்றும் தமிழ் கத்தோலிக்கர்கள் நீதிக்கான தேடுதலில் ஒருத்தருக்கொருத்தர் உதவி கொள்வதற்கு முடியும்.**

விமானக் குண்டுத் தாக்குதலாகும், அதில் சுமார் 145 பேர்கள் உடல்கள் சிதறி உயிரிழந்த சம்பவம் அறிவிக்கப்பட்டது. எனினும், இதற்குப் பொறுப்பானவர்கள் பயங்கர வாதிகள் எனக் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் அவர்களது இனம் அல்லது மதம் தொடர்பாகவும் எதுவும் குறித்துரைக்கப்படவில்லை. நான், நவாலியில் சந்தித்த அனைத்துப் பொதுமக்களுமே, குண்டுவீச்சு இலங்கை விமானப் படையினராலேயே மேற்கொள்ளப்பட்டதென உறுதிப்படக் குறிப்பிட்டனர். “விமானக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட காயங்கள் காரணமான இறப்பு” என இறப்பிற்கான காரணம் குறிப்பிட்டு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்களின் மூலமாக இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. 1995 இல், விமானக் குண்டு வீச்சு மேற்கொள்ளக் கூடியதான ஆயுதக்குழுக் குழு எதுவுமே இங்கு இருக்கவில்லை. “பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய இடம் பெயர்ந்தவர்களே தேவாலயங்கள் மற்றும் கோவில்களில் தஞ்சம் கோரியி ருந்தனர்” என்று யாழ்ப்பாணத்திற்கான அப்போதைய கத்தோலிக்க ஆயர் கூறியிருந்தார். தாக்குதல் நடைபெற்ற மறுநாள், ஏற்பட்ட இத்துன்பியல் நிகழ்வை விவரித்தும் மற்றும் கோவில்கள், தேவால யங்கள், பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகள் போன்ற சிவிலியன் இலக்குகள் மீது விமானங்களிலிருந்து குண்டு வீசுதல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுதல், கனரகப் பீரங்கி மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்வதிலிருந்து நிறுத்திக் கொள்வதற்கு உங்களது படையி னருக்கு தயவுசெய்து அறிவுறுத்தவும்” என வேண்டி யாழ்ப்பாண ஆயர் அப்போதைய ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினாரென் பதையும் ஊடக அறிக்கைகள் சுட்டிக்காட்டின.

சில வருடங்களிற்கு முன்பு நவாலி தேவாலயத்தில் பொது நினைவுச் சின்னம் கட்டப்பட்டது. கடந்த வருடம், 25 வருட ஞாபகார்த்த நினைவேந்தலின் போது, உயிரிழந்த சிலர்களின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டன. உயிரிழந்தவர்கள் சிலரது குடும்பங்கள் பெற்ற நஷ்ட ஈடு ரூ.15,000 என மட்டுப்படுத்தப்பட்டது. குண்டு வீசப்பட்ட ஒரு தேவாலயம், ஓர் இந்துக் கோவில் மற்றும் ஏனைய கட்டடங்களைக் மீளக்கட்டுவதற்கு அரசாங்கம் உதவியளித்ததாக நான் அறியவில்லை. தேவாலயத்தின் மீதான குண்டுவீச்சின் 25ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு தேசிய தொலைக் காட்சி அல்லது ஊடகங்களின் கவனத்தைப் பெறவில்லை. பொலிஸாரும் இராணுவத்தினரும் இந்த நினைவுகூரலை அச்சுறுத்தித் தடை செய்வதற்கும் முயற்சித்தனர். இத்தாக்குதல்களுக்கு உயர்மட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களோ அல்லது பாராளுமன்றக் குழுக்களோ உருவாக்கப்படவில்லை. தாக்குதலிற்குப் பொறுப்பானவர்கள் கைதுசெய்யப்படவில்லை. நீதியை உறுதிப்படுத்துவதாக ஜனாதிபதிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை. இங்கு, பேராயரின் நீதிக்கான கோரல் பெற்றுக் கொண்ட ஊடக கவனத்தை கூட வடக்கு தமிழ் மத குருமார்களின் நீதிக்கான கோரிக்கை ஊடக கவனத்தைப் பெறவில்லை.

### இலங்கையில் உண்மை மற்றும் நீதி வழங்கப்படாமையும் சர்வதேசத் தெரிவுகளுக்கான தேவையும்

கொல்லப்பட்டும் காணாமலும்போன ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் குடும்பங்கள் தங்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையோ அல்லது நீதி கிடைக்கப் பெற்றதா என்றோ தெரியாதுள்ளனர். இவ்வாறு உண்மையும் நீதியுமில்லாது கொல்லப்பட்டு அல்லது காணாமற் போனவர்களுள் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் (2009 இல், முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமற் போனவர்), அருட்தந்தை ஜிம் பிரவுண் (2006 இல், யாழ்ப்பாண மாவட்டத்தின் அல்லைப்பிட்டி கடற்படைச் சோதனைச் சாவடியில் கைச்சாத்திட்ட பின்னர் காணாமற் போனவர்), அருட்தந்தை சந்திரா பெர்ணான்டோ (1988 இல், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொல்லப்பட்டார்), அருட்தந்தை மைக்கல் ரொட்ரிக்கோ (1987 இல், மொனராகலை மாவட்டத்தின் புத்தளவில் கொல்லப்பட்டவர்), அருட்தந்தை மேரி பஸ்டியான்ஸ் (1985 இல், மன்னார் மாவட்டத்தின் வங்காலையில் கொல்லப்பட்டவர்), மற்றும் அருட் சகோதிரி மேரி அக்னெட்டா (1983 இல், பதுளை மாவட்டத்தின் லுணுகலவில் கொல்லப்பட்டார்) ஆகியோரும் அடங்குவர். இவ்வாறு இன்னும் பலர் உள்ளனர்.

ஏறத்தாழ 40 வருடங்களின் பின்னரும் கூட, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட ஒரு சில சம்பவங்கள் தவிர்த்து, போர்க்காலப் படுகொலைகள் மற்றும் குற்றங்களுக்கான நீதி இன்னமும் வழங்கப்படவில்லை. ஓர் அரிதான சம்வத்தில், 2000 இல் மிருசுவில் எனுமிடத்தில் சிவிலியன்களைப் படுகொலை செய்த குற்றத்திற்காக 2015 இல், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த தனியொருவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். ஆனாலும், கடந்த வருடம் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டும் மற்றும் வலிந்து காணாமற் போதல்களுக்கும் உள்ளானார்கள், ஆனாலும், ஒரேயொரு சம்பவத்தில் மட்டும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது குற்றச் சாட்டுகள் நீதிமன்றத்தில்



தாக்கல் செய்யப்பட்டதுடன் இதுவரை எந்தவொரு தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

போரின் முடிவு, வலிந்து காணாமற் போதல்கள், கொலைகள் மற்றும் படுகொலைகள் என்பவற்றையோ அல்லது அவற்றுக்கான குற்றவிலக்களித்தலையோ முடிவுக்கு கொண்டு வரவில்லை. 2013 இல் ரத்துபஸ்வெலவில் சுத்தமான தண்ணீருக்கான போராட்டம், 2011 இல் கட்டுநாயக்கவில் தொழிலாளர் உரிமைப் போராட்டம் மற்றும் 2012 இல் சிலாபத்தில் மீனவர்களின் போராட்டம் என்பன இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரினால் போராட்டக்காரர்கள் கொல்லப்படுவதற்கு இட்டுச் சென்றதுடன் அவற்றுக்கும் நீதி இன்று வரை வழங்கப்படவில்லை. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பலரும் கத்தோலிக்கர்களாவர். 2012 இல் வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை அல்லது 2020 மஹர சிறைச்சாலைப் படுகொலை அல்லது 2014 இல் முஸ்லிம்களுக்கு எதிராக அளுத்கமவில் கலவரம் என்பவற்றுக்கும் கூட நீதி இன்னும் வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் பலரின் குடும்பங்கள், செயற்பாட்டாளர்கள், அவர்கள் சாட்சியமளித்த மற்றும் ஒத்துழைப்பு நல்கிய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைக் கோரினர். பேராயரும் இந்த வரிசையில் அண்மையில் இணைந்து கொண்டு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் ஒரு பிரதியைக் கோரியிருந்தார். ஒரு மாதத்தின் பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு, பேராயர் மற்றும் முன்னணி பௌத்த மதகுருக்களுக்கு அறிக்கையின் பிரதிகள் வழங்கியதாக அறிவித்தது, ஆனாலும், அவை உயிர் பிழைத்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் ஏனைய சிவிலியன்களின் பார்வைக்கு இன்னமும் வெளியிடப்படவில்லை. ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கு மற்றொரு குழுவின் நியமனத்தை பேராயர் நிராகரித்ததாக தெரிவிக்கப்பட்டது. முன்னைய ஆணைக்குழுக்களின் கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளை அணுகுவதற்கு மற்றொரு ஆணைக்குழுவின் நியமனம் தொடர்பாக பரந்துபட்ட விமர்சனங்கள் மற்றும் அவநம்பிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

நீதியை உறுதிப்படுத்துவதில் உள்நாட்டுச் சட்டங்கள், நிறுவனங்கள், பொறிமுறைகள் மற்றும் செய்முறைகள் என்பவற்றின் தோல்வி உயிர்தப்பியவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அக்கறைகொண்ட ஏனைய தரப்புகள் சர்வதேச நீதியை நாடுவதற்கு வழி வகுத்தது. இந்த வருட முற்பகுதியில், பதிப்பாசிரியரும் பத்திரிகையாளருமான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையின் 12 வருடங்களின் பின்னரும், நீதிக்கான எந்த அறிகுறிகளுமின்றி அவரது மகள் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு முறைப்பாட்டைத் தாக்கல் செய்தார். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் அவர் ஐக்கிய அமெரிக்காவிலும் வழக்குகளைத் தாக்கல் செய்தார். உள்நாட்டில் நீதி இல்லாமையினால் அண்மையில் ஏமாற்றமடைந்தவர் பேராயராவர். அவர், உயிர்த் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்களுக்கு இலங்கையில் நீதி இல்லையாயின், சர்வதேச நீதிமன்றத்திடமிருந்து நீதியை நாடுவதற்கும் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளை நாடுவதற்கும் தான் கவனம் கொள்வதாக ஊடகத்திற்கு பேசும் பொழுது கூறினார்.

### கடந்தகால பிளவுகளும் நீதிக்கான ஒன்றுபட்ட முன்னணி ஒன்றுக்கான எதிர்கால வாய்ப்புகளும்

போர்க் காலத் துஷ்பிரயோகங்கள், போரின் பின்னான துஷ்பிரயோகங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் உயிர் பிழைத்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் என்பவற்றின் துயரங்கள் மற்றும் நீதிக்கான அவர்களின் எதிர்பார்ப்புகள் அநேகம் ஒருமித்தவை. உயிர் பிழைத்த சிலர், உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் என்பவற்றுக்கு மற்றைவர்களை விட நீதியின் அடிப்படையில் (அங்கீகரித்தல், நட்டஈடு, நினைவுகூரும் உரிமை, புலன்விசாரணைகள், வழக்குத் தொடர்தல்கள் மற்றும் தண்டனை பெற்றுக் கொடுத்தல் உட்பட) சிறப்புரிமையளிப்பது மனவுளைச்சல்களை அதிகரிப்பதுடன் சமூகங்களை மேலும் துருவப்படுத்துவதாக அமையும்.

சில விதிவிலக்குகளுடன கத்தோலிக்கர்கள் உட்பட சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் போர்க் காலம் மற்றும் போருக்குப் பிந்திய காலக் குற்றங்களுக்கான நீதியைத் தேடுவதில் வேறுபட்ட தெரிவினைக் கொண்டவர்களாக உள்ளனர். நீதிக்காக சர்வதேச ஈடுபாட்டை நாடுவதில் அவர்கள் பிரிவுபட்டுள்ளனர். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் நிகழ்ந்த ஆயிரக் கணக்கானவர்களின் படுகொலைகள், காணாமற் போதல்கள் மற்றும் ஏனைய குற்றங்களுக்காக நீதியை நாடுவதில் சர்வதேசத்தின் ஈடுபாட்டை மன்னார் கத்தோலிக்க ஆயரும், தமிழ் கத்தோலிக்க மதகுருக்கள் மற்றும் ஏனையவர்களும் கோரி நின்ற ஒரு சமயத்தில், இதே கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள், சர்வதேச ஈடுபாட்டுக்கு எதிர்ப்பை வெளியிட்டதுடன், “அவ்வாறான முயற்சிகள் இலங்கை மக்களின் அறிவுடைமைக்கு ஓர் இழுக்காக அமையும்” என்று கூறினார்.

ஆனால், பெப்ரெவரி 11 அன்று, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு உள்நாட்டில் நீதி இல்லையேல், நீதிக்காக சர்வதேச நீதி மன்றத்திற்கு போவதற்கும், ஸ்தாபனங் களின் உதவியை நாடுவதற்கும் தான் தயார் என்று கர்தினால் கூறினார். கர்தினாலின் இந்தக் கூற்று, திருகோணமலை கத்தோலிக்க ஆயர் உட்பட தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் குழுக்கள் மற்றும் தமிழ் மத குருமார்கள் ஆகியோரால் போர்க் காலக் குற்றங் களுக்காக சர்வதேச நீதிக்காக மீளவும் புதிதாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட சில வார காலங்களின் பின்னர் முன்வைக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நிகழ்ந்த பின் இரண்டு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் நீதியை நாடுவதில் உள்ள மட்டுப்பாடுகள், பின்னடைவுகள் மற்றும் சவால்கள் என்பவற்றை கர்தினால் அடையாளம் கண்டுள்ளார். நீதி என்பது, கத்தோலிக்க நம்பிக்கைக்கு மையப் பகுதியானது என்பதுடன், குறைந்தது இப்பொழுதாவது, சிங்கள மற்றும் தமிழ் கத்தோலிக்கர்கள் நீதிக்கான தேடுதலில் ஒருத்தருக் கொருத்தர் உதவி கொள்வதற்கு முடியும்.

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**15**


கேள்விகள் பயிற்சி செய்வதற்கு

01D. குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணம்

**2012 (03,14)**


♦ **தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற் கொண்டு விடை தருக.**

03.ஒன்றோடொன்று சினேகமாக இருப்பதற்கு அதிகம் வாய்ப்புள்ள இரண்டு விலங்குகள்





(1) A யும் D யும் (2) B யும் C யும் (3) Bயும் E யும்

14.வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





**2013 (06,07)**

06.தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு ஒத்தவை.அந்த இரண்டு உருக்கள்





07. கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





**2014 (03,04)**

♦ **03 ஆம் 04ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

03.




04.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# காணி ஆவணங்களை கையாளும் அலுவலகம் இங்குதான் வேண்டும்!

## காதர் மஸ்தான் வலியுறுத்து



**வவுனியா, மார்ச் 15**

**காணி ஆவணங்களைக் கையாளும் அலுவலகம் வடக்கில் இருப்பதே எனது விருப்பம். அதனை உரிய அமைச்சரிடம் வலியுறுத்தியிருக்கின்றேன் என பாராளு மன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரி வித்துள்ளார்.**

வவுனியா- நெடுங்கேணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு காணிக்குரிய ஆவணங்களே அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அது கடந்த காலங்களிலும் அநுராதபுர பிராந்திய காரியாலயத்தால்தான் பார்க்கப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு எனது கோரிக்கைக்கு அமையவே வடமாகாணத்துக்கு கொண்டு வரப்பட்டது.

மீண்டும் குறித்த அலுவலகம் அவசரமாக அங்கு கொண்டுசெல்லப்பட்டமை தொடர்பில் உரிய அமைச்சருடன் பேசியிருக்கின்றேன். சில செயல்பாடுகளை இலகுவாகவும், அவசரமாகவும் செய்வது தொடர்பில் சில காரணங்கள் அவரால் சொல்லபட்டன. அவை பொருத்தமில்லாத காரணங்கள் எனக் கூறியிருந்தேன்.

வடமாகாணத்திலேயே இந்தக் காரியாலயம் இருக்கவேண்டும் என்று எனது கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றேன். இங்கு இருக்கவேண்டும்என்பதுதான் என்னுடைய விருப்பமும். எனவே, மீண்டும் ஒருமுறை இந்த விடயம்குறித்து அமைச்சருடன் பேசவுள்ளேன்- என்றார். (எ)

# கொரோனாவால் உயிரிழந்தோரின் 45 சடலங்கள் இதுவரை அடக்கம்!

## இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, மார்ச்.15



நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனா சடலங்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய் வது தொடர்பில் நிலவிய பிரச்னைகள் முழுவதுமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளதாகவும் அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் உடல்கள் அடக்கம் செய்யும் நட வடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# அஸாத் சாலி சர்ச்சை கருத்து: விசாரிப்பதற்கு குழு நியமனம்!

கொழும்பு, மார்ச்.15



முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் விசாரிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலை மையிலான ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அஸாத் சாலி, பணம் இருந்தால் நான்கு பெண்களை திருமணம் செய்துகொள்வதில் என்ன தவறு எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்தோடு, கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதி பதியாக பதவி ஏற்றுக்கொண்டார் என்பதற்காக குர்ஆனில் உள்ள சட்டங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்றும், அவ்வாறு சட்டங்கள் மாற்றப்பட்டாலும் அதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைமையை சட்டங்களால் மாற்றிவிட முடியாது. முஸ்லிம் ஆண் ஒருவர் தனது பண வசதிக்கு ஏற்ற வகையில் பெண்களை திருமணம் செய்து கொள்கின்றார். அதில் எவ்வித தவறும் கிடையாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, முஸ்லிம் சட்டம் தொடர்பில் அஸாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் உள்ளிட்ட சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இந்நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடக்கு காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றம்

## காணி அமைச்சரை பதிலளிக்க கோருகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, மார்ச் 15
வடக்கு மாகாணத்தில் நான்கு மாவட்டங்களின் காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன பதிலளிக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் நேற்று டுவிட்டரில் பதிவிட்டுள்ள மனோ கணேசன்: யாழ்ப்பாணத்திலிருந்த வடமாகாண பிராந்திய காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம், இப்போது யாழ். மாவட்ட அலுவலகமாக குறைக்கப்பட்டு, வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களின் ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் காணி அமைச்சர் சந்திரசேன பதிலளிக்க வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார். (எ)

# மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரம்!

## அதன் பின்னரே மாகாணத் தேர்தல் அமைச்சர் சரத் வீரசேகர விருப்பம்



**கொழும்பு, மார்ச் 15**

**புதிய அரசமைப்பு மூலம் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி, அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே சிறப்பாக இருக்கும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த யாப்பின் பிரகாரம் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே சிறப்பாக இருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சாத்தியமற்ற விடயங்களையே சாணக்கியன் பேசி வருகிறார்

## பிள்ளையான் கடும் சாடல்



மட்டக்களப்பு, மார்ச் 15
பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களையே பேசி வருகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: எந்தவொரு வேலைத்திட்டத்தையும் செய்யாமல், வீதிகளை அமைத்து, குளங்களை அமைத்து, நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை விடுத்து அவன் வருகின்றான், இவன் வருகின்றான், விகாரைகளை அமைக்கின்றான் என்று கூறினால் என்ன மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்தப் போகின்றீர்கள்.

நாம் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களையே சொல்கின்றோம். நாங்கள் முதலில் மாற வேண்டும். வேறு எவரதும் கால்களைப் பிடிக்கத் தேவையில்லை.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, மக்களை முன்னேற்றுகின்ற பலப்படுத்துகின்ற கட்சியாகும். எங்கள் வேலைத்திட்டம் மிகத் தெளிவானது.

அடுத்தமுறை எமது மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருவாரானால் தொழில் வாய்ப்பை பெருக்குவதற்கு, தொழிற்பேட்டைகளை அமைக்கலாமா, இங்கேயே 20ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கலாமா என்பது குறித்து கலந்துரையாடுவோம்.

நாங்கள் முதலில் வவுணதீவு, கரடியனாறு போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்னையை நிவர்த்தி செய்வோம். இதற்காக 400 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

புதிய அரசாங்கத்தின் கொள்கையால் மட்டக்களப்பு மாவட்டம் நன்மையடைகின்றது. நாங்கள் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் பிறரை எதிர்பார்த்திருந்து பின்தங்கிவிட்டோம். இப்போது நாம் தான் அனைத்தையும் செய்யப்போகின்றோம்.

நாங்கள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கதைகளை கேட்டு துப்பாக்கி ஏந்திப் போராடினோம். எமது மாவட்டத்தின் இளைஞர்கள் பலர் மரணித்திருக்கின்றனர். அவர்களின் நோக்கம் இங்கு வாக்குகளை பெறுவதாகும்.

சாணக்கியன் போன்றவர்களை பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வாக்குகளைப் பெறவேண்டும். தமிழரசுக்கட்சியின் செயலாளர் பதவியை சுமந்திரன் பெறுவதற்காக சாணக்கியனைப் பயன்படுத்துவார். கட்சிக்குள் பலத்தைக் கூட்டுவதற்கே இவர்கள் பார்க்கின்றனர் என்று குறிப்பிட்டார். (எ)



## 51 பேருக்கு கொரோனா உறுதி

# மாத்தறை மொரவக்க நகரின் விற்பனை நிலையங்கள் பூட்டு

மாத்தறை, மார்ச் 15
கொரோனா வைரஸ் தொற்றால் மாத்தறை - மொரவக்க நகரின் விற்பனை நிலையங்களை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் மூன்று நாள்களுக்கு இந்தப் பகுதிகளிலுள்ள விற்பனை நிலையங்களை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மொரவக்க வாரச்சந்தையை மறுஅறிவித்தல் வரை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிடபெத்தர பிரதேச சபை அறிவித்துள்ளது.

மொரவக்க சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நேற்று முன்தினம் 51 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்தே இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# யாழில் உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு அம்பாறை மாவட்ட இளைஞர்கள் ஆதரவு



யாழ்ப்பாணம், மார்ச்15
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் நீதி வேண்டிய உணவு தவிர்ப்புப் போராட்டத்தில், அம்பாறை மாவட்ட இளைஞர்கள் சிலரும் இணைந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 15ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லை ஆதீனம் முன்பு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (எ)

# நாடளாவிய ரீதியில் திடீர் தொழிற்சங்க நடவடிக்கை

## அரச வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15
நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார சேவை யாப்பை திருத்தத்துக்கு உட்படுத்தி, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறாவிட்டால் முன்னறிவிப்பின்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்: சுகாதார சேவை யாப்பானது, வைத்தியத்துறைசார் முக்கியஸ்தர்களின் இணக்கப்பாடின்றியே திருத்தப்பட்டுள்ளது.இந்தத் திருத்தங்களால் எதிர்காலத்தில் பல பிரச்னைகள் ஏற்படும்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் உரிய தீர்மானத்தை மேற்கொள்ள எதிர்வரும் 18ஆம் திகதி, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (எ)



## டில்லியில் ரயிலில் தீ விபத்து

புதுடில்லி, மார்ச் 15

இந்தியா தலைநகர் டெல்லியில் இருந்து தேஹ்ரடுன் நோக்கிச் சென்று கொண்டிருந்த சதாப்தி எக்ஸ்பிரஸ் ரயிலில் மின்கசிவு காரணமாக பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

சி-4 பெட்டியில் தீ பிடித்து பற்றி எரிந்துள்ளது. இச் சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

உடனடியாக செயற்பட்ட மீட்புபணியாளர்கள் பயணிகள் அனைவரும் காயங்கள் எதுவும் ஏற்படாமல் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக உத்தரகாண்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கஸகஸ்தானில் இராணுவ விமானம் விபத்து 4 பேர் பலி

அல்மடி, மார்ச் 15

கஸகஸ்தானில், இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியாகினர்.

மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலைநகர் நுர்-சுல்தானில் இருந்து பயணித்த குறித்த இராணுவ விமானம் அல்மடி நகரில் தரையிறங்க முற்பட்ட வேளை விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான விபத்து இடம்பெற்றமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மியன்மாரில் இராணுவம் தொடர்ந்து அட்டூழியம்!

## துப்பாக்கிச்சூட்டில் மேலும் 4 போராட்டக்காரர்கள் உயிரிழப்பு




யாங்கூன், மார்ச் 15

மியன்மாரின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான மாண்டலேவில் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் போராட்டக்காரர்கள் 4 பேர் உயிரிழந்தார்.

தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளது. அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உட்பட 100இற்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்களை, இராணுவம் கைது செய்து சிறை வைத்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் நடந்த பொதுத்தேர்தலில், மோசடி நடந்திருப்பதாக குற்றம்சாட்டி, ஆட்சிக் கவிழ்ப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறது மியன்மார் இராணுவம்.

ஆனால் மியன்மார் மக்கள், இராணுவ ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டில் ஜனநாயகம் மீட்கப்பட வேண்டும் எனக்கோரி ஒரு மாதத்துக்கும் மேலாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களை, இராணுவம் கொன்று குவித்து வருகிறது.

ஆட்சி கவிழ்ப்பு நடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி முதல், இப்போது வரை இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் 70க்கும் அதிகமான போராட்டக்காரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் இராணுவத்தின் இந்த அடக்குமுறையை மீறியும் மியன்மாரில் நாளுக்கு நாள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

இந்நிலையில் நேற்று மியன்மாரின் 2ஆவது மிகப்பெரிய நகரமான மாண்டலேவில் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் போராட்டக்காரர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்சிசன் செயலிழப்பால் 7 நோயாளிகள் உயிரிழப்பு

## ஜோர்தான் சுகாதார அமைச்சர் பணிநீக்கம்

அம்மான், மார்ச் 15

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் ஒட்சிசன் செயற்பாடு செயலிழந்தமையால் ஏழு பேர் இறந்ததை அடுத்து ஜோர்தானின் சுகாதார அமைச்சர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் அம்மானுக்கு மேற்கே புதிய அரச வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை, மகப்பேறு மற்றும் கொரோனா நோயாளிகள் சிகிச்சைபெறும் பிரிவுகள் ஒட்சிசன் செயலிழப்பு காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன.

இந்த சம்பவத்தை அடுத்து இறந்தவர்களின் உறவினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தை அடுத்து ஜோர்தானின் சுகாதார அமைச்சரை பணிநீக்கம் செய்துள்ளதாகவும், இதற்கு தனது அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாகவும் பிரதமர் பிஷர் அல் கஸ்வானே தெரிவித்துள்ளார். பிரிட்டனில் பரவும் புதியவகை கொரோனா வைரஸ் மாறுபாட்டை எதிர்கொள்ள, கடந்த வாரம் கடுமையான நடவடிக்கைகளை ஜோர்தான் அறிவித்தது.

சுமார் 10 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ஜோர்தானில் 385,533 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை 5,224 இறப்புகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஜோ பைடனை சந்திக்கும் ஜப்பான் பிரதமர்



ரோக்கியோ, மார்ச் 15

ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா ஏப்ரல் 9 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்திக்க வாய்ப்புள்ளது என சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த சந்திப்பு இடம்பெற்றால் வெள்ளை மாளிகையில் புதிய ஜனாதிபதியை சந்தித்த முதல் வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமையை அவர் பெறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடலின் உறுதிப்பாட்டை வலுப்படுத்த இருவரும் ஒப்புக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏப்ரல் முதல் வாரமளவில் சுகா இந்த விஜயத்தை மேற்கொள்வார் என்று தலைமை அமைச்சரவை செயலாளர் கட்சுனோபு கடோ கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, அவரை முதன்முறையாக சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அணுசக்தியால் இயங்கும் விமானம் தாங்கி கப்பலை முழு வீச்சுடன் உருவாக்கும் சீனா!

பீஜிங், மார்ச் 15

ஆசியா-பசுபிக் பிராந்தியத்தில் தனது கடற்படை சக்தியை அதிகரிக்க முற்படும் சீனா, தனது நான்காவது விமானம் தாங்கி கப்பலை முழு வீச்சுடன் உருவாக்கி வருகிறது.

இந்த நிலையில் இந்தக் கப்பல் அணுசக்தியால் இயங்கும் என நாட்டின் இராணுவத்திற்கு நெருக்கமான ஆதாரங்களை மேற்கோளிட்டு 'தென் சீனா மோர்னிங் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த செய்தியில், 'கப்பல் கட்டுபவர்கள் நான்காவது கரியரை (விமானம் தாங்கி கப்பல்) நிர்மாணிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்த ஆர்வமாக உள்ளனர். இது கப்பல் கட்டும் தொழிலுக்கு ஒரு தொழில்நுட்ப முன்னேற்றமாக இருக்கும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பெயரிடப்படாத மற்றோர் ஆதாரம், சீன அதிகாரிகள் நான்காவது கேரியருக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை ஆய்வு செய்கின்றனர். ஆனால், இது சவால்கள் நிறைந்த ஒரு தைரியமான முடிவு' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாக தாமதமாகிவிட்ட நான்காவது கப்பலின் கட்டுமானம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் தொடங்கியது.

தற்போது, ஏற்கனவே இரண்டு சீன விமானம் தாங்கிகள் இயங்கி வருகின்றன. மூன்றாவது கப்பல் இந்த ஆண்டு இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இவற்றில் எதுவுமே அணுசக்தி திறன் இல்லை.

2017ஆம் ஆண்டில் சீனா தனது பாதுகாப்புத் தொழில்களின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப நுட்பத்தை நிரூபிக்கும் விதமாக, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி கப்பலை அறிமுகப்படுத்தியது.

# 2022இல் ஐ.பி.எல்லில் 10 அணிகள்! மே மாதம் ஏலத்தை நடத்த திட்டம்

INDIAN PREMIER LEAGUE

புதுடில்லி, மார்ச் 15

2022ஆம் ஆண்டு நடைபெற வுள்ள 15ஆவது ஐ.பி.எல். போட்டியில் 2 புதிய அணிகள் பங்கேற்கின்றன. இதனால், அடுத்த ஆண்டு தொடரில் மொத்தம் 10 அணிகள் விளையாடவுள்ளன.

ஐ.பி.எல். இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத், டில்லி கப்பிட்டல்ஸ், றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

அடுத்த ஆண்டு (2022) நடைபெறும் 15ஆவது ஐ.பி.எல். போட்டியில் 2 புதிய அணிகள் பங்கேற்கின்றன. இதனால் அடுத்த ஆண்டு தொடரில் மொத்தம் 10 அணிகள் விளையாடுகின்றன.

2 புதிய அணிகளுக்கான ஏலம் எதிர்வரும் மே மாதம் நடைபெறும் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்த ஆண்டுக்கான 14ஆவது ஐ.பி.எல். போட்டி நிறைவை நெருங்கி கொண்டிருக்கும் போது இந்த ஏலம் நடைபெறும்.

ஐ.பி.எல். தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நடத்திய கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தவிர, அஹமதாபாத் நகரை தலைமையிடமாக கொண்டு புதிய அணி ஒன்று தெரிவாவது உறுதியாகி உள்ளது. ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் அணிகள் மூலம் அதன் உரிமையாளர்கள் கோடிக் கணக்கான வருவாயை பெறுகிறார்கள். இதனால் இந்த ஏலத்தில் புதிய அணிகளை வாங்கக் கடுமையான போட்டி இருக்கும்.

அதிகமான தொகையை ஏலத் தொகையில் குறிப்பிடும் முதல் 2 பேர் அணிகளின் உரிமையை பெறுவார்கள் எனத் தெரிய வருகின்றது. (ஐ)



## மீண்டுமொரு சாதனை படைத்தார் மிதாலி ராஜ்

லக்னோ, மார்ச் 15

இந்திய ஒருநாள் மகளிர் கிரிக்கெட் அணித் தலைவி மிதாலி ராஜ் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டினார்.

சர்வதேச மகளிர் ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 7 ஆயிரம் ஓட்டங்களை பெற்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் நேற்றுப் பெற்றார்.

லக்னோவில் தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு எதி ராக இடம்பெற்று வரும் நான்காவது ஒருநாள் போட்டி யிலேயே அவர் இந்த சாதனையை புரிந்துள்ளார்.

போட்டி தொடங்குவதற்கு முன்பு, மிதாலி தனது ஒருநாள் கிரிக்கெட் வாழ்வில் 6,974 ஓட்டங்களை எடுத் திருந்தார். போட்டி ஆரம்பமான பின்னர், துடுப்பெடுத் தாட களமிறங்கிய அவர் 26 ஓட்டங்களை பெற்று 7 ஆயி ரம் ஓட்டங்களை பெற்றார். தனது 213 ஆவது ஒருநாள் போட்டியில் மிதாலி இந்த மைல்கல்லை எட்டினார்.

இதன் பின்னர் அவர் 71 பந்துகளில் 4 பௌண்ட்ரி கள் அடங்கலாக 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார்.

மிதாலி நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் போது சர்வதேச மகளிர் கிரிக்கெட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமை பெற்றமையும் குறிப் பிடத்தக்கது.

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து:

## மகுடம் சூடியது மும்பை சிற்றி

கோவா, மார்ச் 15

ஐ. எஸ். எல். என்று அறியப்பட்ட இந்தியன் சுப்பர் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது மும்பை சிற்றி.

7ஆவது ஐ. எஸ். எல். போட்டித் தொடர் கோவா வில் நடந்தது. லீக் ஆட்டங்களின் சுற்று முடிவில் மும்பை சிற்றி, ஏ.டி.கே.மோகன் பகான், நோர்த் ஈஸ்ட் யுனை டெட் (கவுகாத்தி), கோவா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

மும்பை அணி அரையிறுதியில் 2 சுற்று முடிவில் சமநிலை வகித்ததால் (2-2) சமநிலை தவிர்ப்பு உதையில் 6-5 என்ற கோல் கணக்கில் கோவாவை வீழ்த்தி முதல் முறையாக இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது.

3 முறை சம்பியனான அட்லெடிகோ டி கொல்கத்தா, இந்த முறை புகழ் பெற்ற மோகன் பகான் கிளப்புடன் இணைந்து ஏ.டி.கே. மோகன் பகான் என்ற பெயரில் களம் கண்டது. அந்த அணி அரைஇறுதியில் 2 சுற்று முடிவில் 3-2 என்ற கோல் கணக்கில் கவுகாத்தி அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இறுதியாட்டத்தில், மோகன் பகான் அணியின் வில்லியம்ஸ் 18ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். ஆட்டத்தின் 29ஆவது நிமி டத்தில் மும்பை அணியின் கோலை தடுக்க முயன்ற பகான் அணியின் வீரர் டிரி சேம் சைடு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி முடிவில் 1-1 என சமநிலை வகித்தன.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மும்பை வீரர் பார் தோலெமெவ் கடத்திக் கொடுத்த பந்தை பிபின் சிங் கோலாக மாற்றினார். இறுதியில், மும்பை அணி 2-1 என்ற கணக் கில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. (ஐ)





## இலங்கைக்கு எதிரான டெஸ்ட்: மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு

ஜமைக்கா, மார்ச் 15

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடவுள்ள மே.இ. தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரின் கேப்டனாக பிராத் வெய்ட் நியமிக்கப்படுவார் என்று மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை அண்மையில் அறிவித்திருந்தது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் எதிர்வரும் 21 ஆம் ஆம் திகதி ஆரம்ப மாகின்றது. இதற்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

**அணி விவரம்:**

கிரைக் பிராத்வெய்ட், ஜெர்மைன் பிளக் வூட், பொன்னர், டெரன் பிராவோ, ஜோன் கேம்பல், ரகீம் கோர்ன்வெல், ஜோசுவா டசில்வா (விக்கெட் காப்பாளர்), ஷனான் கேப்ரியல், ஜேசன் ஹோல்டர், அல்ஸாரி ஜோசப், கைல் மேயர்ஸ், கெமர் ரோச், ஜோமெல் வோரிகன்.



## மெக்சிகோ பகிரங்க ரென்னிஸ்: இறுதியாட்டத்தில் பௌச்சர்ட்

மெக்சிக்கோ சிற்றி, மார்ச் 15

மெக்சிகோ ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு பௌச்சர்ட் முன்னேறினார்.

மெக்சிகோவில் பெண்களுக்கான பகிரங்க ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் கனடாவின் ஈகியூனி பௌச்சர்ட், இத்தாலியின் எலிசபெட்ராவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை பௌச்சர்ட் 6:2 என கைப்பற்றினார். இரண்டாவது செட் 'ரை பிரேக்கர்' வரை சென்றது. இதில் பௌச்சர்ட் 7:6 என வென்றார். முடிவில பௌச்சர்ட் 6:2, 7:6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

இதில் ஸ்பெயினின் டார்மோவை சந்திக்கவுள்ளார். (ஐ)



# எங்களை ஏன் எவரும் சந்திக்க வரவில்லை?

## வடக்கு சுகாதார தொண்டர்கள் அரச தரப்பை நோக்கி கேள்வி

யாழ்ப்பாணம்,மார்ச் 15

**கடந்த 7 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தம்மை, அரச கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் எவரும் நேரில் சந்திக்க வரவில்லை என வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும், சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 7 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த

வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள், தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8 ஆம் திகதி முதல் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகைதந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதுவரை வருகை தரவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)



## பல இடங்களில் மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, மார்ச்.15

கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும், நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

## கரைவலை மடிகள், கால்நடைகள் குடத்தனையில் தொடர் திருட்டு!

வடமராட்சி, மார்ச், 15

குடத்தனையில் ஒரே இரவில் தொடர் திருட்டில் கரைவலை மடிகள், கால்நடைகள் என்பன திருடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை - பொற்பதி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தத் தொடர் திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஜே-221 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட குடத்தனை பொற்பதி கிராமத்தில் இடம் பெற்ற இத்தொடர் திருட்டு சம்பவத்தில், நான்கு மீனவர்களுக்கு சொந்தமான ஆறு கரை வலை மடிகளே இவ்வாறு திருடப்பட்டன. அத்துடன் ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த குட்டித்தாச்சி ஆடு ஒன்று களவாடப்பட்டுள்ளது. இதே போல், பிறிதொரு வீட்டில் வளர்க்கப்பட்ட கோழிகள் சிலவும் திருடப்பட்டன.

இந்தத் தொடர் திருட்டுக் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## தமிழரின் காணிகளை அபகரிக்கவே ஆவணங்கள் அ'புரத்துக்கு மாற்றம்!

### சுமந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச்.15

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே கொண்டு செல்லப்படுகின்றமையை, அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதன் ஒரு கட்டமாகவே நாங்கள் பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர், ஆவணங்களை அநுராதபுரத்தில் வைத்துவிட்டு, தமிழ் மக்கள் தங்களின் தாயகம் என்று கூறும் நிலத்தை என்னவிதமாக அப கரிக்கலாம் என்ற திட்டங்களை வகுப்பதற்காகத்தான் இந்த ஆவணங்கள் இரவோடிரவாக அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளன என்றார். (எ)

### தவறுகளை குறைக்க

## அரச நிறுவனங்களில் விஷேட சோதனைகள்

கொழும்பு, மார்ச்.15

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அரச நிறுவனங்களை விஷேட சோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டம் இன்று திங்கள்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் தவறுகளைக் குறைத்து, பொதுமக்களுக்கு செயல்திறன்மிக்க சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இன்று ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 28 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## வீதி விபத்துக்களால் ஒருநாளில் 12 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாத்திரம் வீதி விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் மட்டும் ஏழு பேரும், அதற்கு முன்னர் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்திருந்த ஐந்து பேருமே இவ்வாறு உயிரிழந்தனர் என்று தெரிய வந்தது.

அண்மை நாட்களாக வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதனால், வாகன சாரதிகள் போக்குவரத்து சட்டங்களை அவசியம் கடைபிடித்து வாகனங்களை செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

சிறப்பு சலுகை
ஆரோக்கியா பல் வைத்தியசாலையில்
வழங்கப்படும் பல் வைத்திய சேவைகளுக்கான ஆரம்பகால கட்டண சலுகைகளைப் பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுவீர்
AAROKYA DENTAL CARE
Petrol Shed Lane,Nelliyady.
074070 2241, 0759759828



## இதுவும் நடந்தது!

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த இந்தியத் தூதுவர் நேற்றுமுன்தினம் இங்குள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தார்.

முக்கிய அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் மாத்திரம் அவர் கட்சியின் இளம் பிரதிநிதிகளையே சந்திக்க விரும்பினார் எனத் தெரிவிக்கப்பட்டு சில 'இளம்தலைவர்கள்' சந்தித்திருந்தனர்.

இது தூதுவரின் விருப்பமா அல்லது, கட்சியிலுள்ள சிலரின் விருப்பமா என்பது தெரியவில்லை.

ஒருவேளை, கூட்டமைப்பிற்கு தாங்கள் தான் மாற்று என்று சொல்கின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரைச் சந்தித்த பின்னர் கூட்டமைப்பினரைச் சந்திக்கின்றபோது அவர்களின் இளம் தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தூதுவர் அறிய விரும்பியிருக்கக்கூடும்.

ஏனெனில், மக்கள் முன்னணி சார்பில் சந்திக்கின்ற இருவரும் இளையவர்கள். அவர்களின் எண்ண ஓட்டங்களுக்கும் கூட்டமைப்பிலுள்ள இளையவர்களின் எண்ண ஓட்டங்களுக்குமிடையே ஏதேனும் வேறுபாடு இருக்கின்றதா என்று தூதுவர் அறிய விரும்பியிருக்கலாம். கூட்டமைப்பின் இளைய தலைமுறையினர் என்று ஒருசில பிரதேச சபை தவிசாளர்களும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மூவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என செய்திகள் தெவித்தன.

சந்திப்பின்போது பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தத்தமது பிரதேச அபிவிருத்தியில் இந்தியா எத்தகைய பங்கு வகிக்கலாம் என்பது குறித்தே பேச அனுமதிக்கப்படுவார்கள் என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் சில செய்திகள் தெரிவித்தன.

ஆனால், சந்திப்பிற்கு பின்னர் வெளிவந்த செய்திகளில் பலாலி விமான நிலையத்தை திறப்பது குறித்தும், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திபற்றியும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. கூடவே, காங்கேசன் துறையிலிருந்து இந்தியாவிற்கு கப்பல் போக்கு வரத்து பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது.

நமது பிரதேச சபைகளின் தவிசாளர்கள் என்ன குறைந்தவர்களா? இந்தியாவிடம் என்ன பேசவேண்டும் என்பது அவர்களுக்கு தெரியாதா என்ன? சரியானதைத்தான் கேட்டிருக்கிறார்கள்.

இல்லையெனில், தத்தமது பிரதேசங்களை எந்த வகையில் அபிவிருத்தி செய்யலாம். ஒவ்வொரு பிரதேச சபைக்குள்ளும் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி என்ன வகையான அபிவிருத்திகளைச் செய்யலாம். அதற்கு இந்தியாவின் உதவியை எப்படியெல்லாம் பெறலாம் என்று திட்டமிட்டு, ஆகக்குறைந்தது அவற்றை திட்ட வரைவுகளாக எடுத்துச் சென்று தூதுவரிடம் கொடுத்து பேசியிருப்பார்கள் என்று நீங்கள் யாராவது நினைத்தால் அதற்கு அவர்கள் பொறுப்பானவர்கள் அல்ல.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தாங்கள் அந்தச் சந்திப்பில் வடை சாப்பிடுவதற்கு மாத்திரமே வாய் திறக்க அனுமதிக்கப்பட்டதாக ஊடகவியலாளர் ஒருவரிடம் கூறி வேதனைப்பட்டதாக ஒரு கொசுறுச் செய்தி வெளிவந்திருந்தது.

அட, இதுகுமா?, முப்பது நிமிட சந்திப்பில் நமது பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தத்தமது பகுதி அபிவிருத்தி பற்றி கதைப்பதற்கே நேரம்போதாதபோது வடை சாப்பிடுவதற்கும் சில நிமிடங்களை அநியாயமாக்கனீர்களா என்று அந்த ஊடகவியலாளர் அவரிடம் கேட்டாரோ தெரியவில்லை.

ஆனாலும் அந்த ஊடகவியலாளர் சொன்ன பதிலும் நியாயமானதுதான். 'உங்கள் கட்சித் தலைவரை பேசவிட்டிருந்தால், அவர் அறுபதாம் ஆண்டிலிருந்து தொடங்கி ஆயுதப் போராட்டத்திற்கு வரும்போதே சந்திப்பிற்கான நேரம் முடிந்திருக்குமே!'

**- ஊர்க்குருவி.**

# சுயநல அபிவிருத்தியே குறிக்கோள்: அந்த சித்தாந்தம் தூய்மையற்றது!



## விக்னேஸ்வரன் விமர்சனம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

**மக்கள் சேவை எனக்கூறி சுயநல அபிவிருத்தியே குறிக்கோளாக இருப்பவர்களின் சித்தாந்தம் தூய்மையற்றது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வாரம் ஒரு கேள்வி பதிலில்: ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி: உங்கள் கட்சி பதிவு பெற்றதாகப் பத்திரிகையில் செய்தி படித்தேன். உங்கள் கட்சி மற்றக் கட்சிகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

பதில்: எமது கட்சி இன்னமும் பதிவு பெறவில்லை. பதிவு பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

எமது தமிழ் மக்கள் கூட்டணியில் நாங்கள் எவருமே பாரிய புத்திசாலிகள், கெட்டிக்காரர்கள், திறமைசாலிகள் என்று பெயர் எடுத்தவர்கள் அல்லர். நாங்கள் மிகச் சாதாரணமானவர்கள். அரசியலுக்குப் புதியவர்கள்.

எங்களுக்கிருக்கும் ஒரேயொரு பொதுக் குணாதிசயம், நாங்கள் எங்கள் மக்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றோம் என்பதாகும். அந்த அன்புதான் எங்கள் பலம். ஒரு மானிடரின் வாழ்வைப் பரிசீலித்துப் பார்த்தீர்களானால் அவரின் சிந்தனையில் இருந்து சித்தாந்தம் வரையிலான அவரின் வாழ்வுமுறையே வாழ்க்கை என்று குறிப்பிடப்படுகின்றது.

சிந்தனையில் இருந்து பிறப்பது சொல். சொல்லில் இருந்து பிறப்பது செயல். ஒருவரின் சிந்தனை, சொல் மற்றும் செயல்களின் வாயிலாக அவர் பிரதிபலிப்பதுதான் அவரின் சித்தாந்தம். இதிலே வழி நெடுகலும் தூய்மை வேண்டும். சிந்தனையில் தூய்மை, சொல்லில் தூய்மை, செயலில் தூய்மை என வாழ்ந்தால் எமது சித்தாந்தமும் தூய்மை பெறும். அதை விட்டு அசிங்கமான சிந்தனைகளோ, சொற்களோ அல்லது செயல்களோ எம்மைப் பீடித்துக் கொண்டால் எமது வாழ்க்கை கேள்விக் குறியாகிவிடும்.

அரசியல் என்பது குறிக்கோள்களைக் கொண்டது. ஆகவே, சித்தாந்தத்தை மையமாக வைத்தே அரசியல் நடைபெறுகின்றது, நடைபெற வேண்டும். எமது கட்சியின் சித்தாந்தம் என்ன என்று கேட்டால் மக்கள் சேவையாகும். எல்லோரும் மக்கள் சேவை செய்கின்றோம் என்று தானே கூறுகின்றார்கள் என்று கேள்வி கேட்பீர்கள். இங்குதான் தூய்மை என்பது அவசியம். மக்கள் சேவை எனக்கூறி சுயநல அபிவிருத்தியே குறிக்கோளாக இருப்பவர்களின் சித்தாந்தம் தூய்மையற்றது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)





## வெளிவிவகார அமைச்சின் நான்காவது அலுவலகம் திருகோணமலையில் திறப்பு

திருகோணமலை, மார்ச் 15

வெளிவிவகார அமைச்சின் நான்காவது பிராந்திய அலுவலகம் துறைசார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவால் நேற்றுத் திருகோணமலையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரள, எம்.எஸ்.தௌபீக், இரா. சாணக்கியன், யதாமணி குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அரச நிறுவனங்களின் செயல்பாடுகளை கிராமங்களுக்கும் கொண்டுசெல்லல் என்ற அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய மக்களுக்கு இலகுவான முறையில் சேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்தப் பிராந்திய அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். (எ)

## கூட்டு ஒப்பந்தம் இனி முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும்!

### மலையக மக்கள் முன்னணி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 15

கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பெரும்பான்மையினர் தம்வசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, தற்போது வட மாகாணக் காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்படுகின்றன என அந்த முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா நேற்று ஹற்றனில் முன்னணியின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும். ஏனெனில், மலையக மக்களின் பிரச்னை இதன்போது அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தப்படும். தற்போது கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களும், கம்பனிகளுமே கைச்சாத்திடுகின்றன. எனவே, மூன்றாவது தரப்பாக அரசாங்கத்தையும் இணைக்க வேண்டும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்னையைத் தீர்க்க சிங்களவர்களின் ஒத்துழைப்பும் அவசியம். அதேபோன்று பெண்கள் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமாயின் ஆண்களின் அனுசரணை அவசியம். - என்றார். (எ)

## கொரோனா தொற்றிலிருந்து மேலும் 395 பேர் குணமடைவு

கொழும்பு, மார்ச்15

இலங்கையில் மேலும் 395 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 84 ஆயிரத்து 648 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் நேற்றுவரை 87 ஆயிரத்து 600 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 526 பேர் இதுவரையில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்
இரவு
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அதிகாரிகளிற்கு தடை விதிப்பது குறித்து பிரிட்டன் ஆராயவேண்டும்!

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள்



லண்டன், மார்ச் 15

**மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை, விஸாக்களை முடக்கும் பிரிட்டனின் சர்வதேச தடை திட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டிய இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகள் யார் என்பது குறித்து பிரிட்டனின் அமைச்சர்கள் கருத்தில்கொள்ளவேண்டும் என பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் விரேந்திர சர்மா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வெளிவிவகார பொதுநலவாய அமைச்சர் அகமட் பிரபுவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

‘இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல்களிற்கு பொறுப்புக்கூறும் நடைமுறைகளை ஆரம்பிக்குமாறும் நிலைமாற்றுக்கால நீதி செயற்பாடுள் சமாதானம் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான நடவவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் இலங்கைக்கு அறிவுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை இலங்கை கடைப்பிடிக்க வேண்டும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

இந்த தீர்மானத்திலிருந்து இலங்கை அரசாங்கம் 2020 இல் விலக தீர்மானித்தது ஆழ்ந்த ஏமாற்றமளிக்கின்ற விடயம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் பேரவையின் அமர்விற்கு முன்னதாக எச்சரித்திருந்தது போன்று கடந்த ஒரு வருட காலப்பகுதியில் கரிசனை தரும் போக்குகள் உருவாகியுள்ளன. இலங்கையில்மனிதஉரிமைகள் நிலவரம் மோசமடைகின்றது என்பதற்கான ஆரம்ப கட்ட எச்சரிக்கைகளாக இவையிருக்கலாம்.

இலங்கைக்கும் பிரிட்டனிற்கும் இடையிலான எதிர்கால வர்த்தக உறவுகள் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்களிற்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வதற்கான பிரிட்டனின் அறிவிக்கப்பட்ட பொறுப்புக்கூறலை அலட்சியப்படுத்தாத விதத்தில் அமைந்திருப்பதை பிரிட்டிஸ் அரசாங்கம் உறுதி செய்வேண்டும்.

மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை முடக்கும் விசாக்களை முடக்கும் பிரிட்டனின் சர்வதேச தடை திட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டிய இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகள் யார் என்பதையும் பிரிட்டனின் அமைச்சர்கள் கருத்திலெடுக்க வேண்டும்” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இயந்திரம் இயங்கிய நிலையில் இந்திய படகு கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 15

இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்த நிலையில் இந்தியப் படகு ஒன்று மீனவர்கள் எவரும் இல்லாத நிலையில் நெடுந்தீவில் கரையொதுங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த இந்த இந்திய மீன்பிடிப்படகு கரையொதுங்கியுள்ளது.

இந்தப் படகு இந்தியாவின் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் என்ற இடத்தை சேர்ந்தது என்றும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, தமிழக மீனவர் பிரதிநிதிகள் ஊடாக தொடர்புகொண்டு குறித்த படகு குறித்து தகவல் பெறப்பட்டபோது, படகில் இருந்தவர்களின் நித்திரை கொண்டமையால் படகு எல்லை தாண்டியது என்றும், இதனை அடுத்து அவர்கள் பிறிதொரு படகில் இந்தியா திரும்பி விட்டனர் என்றும் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# போதை, ‘ரிக் ரோக்’ மோகத்தால் விபத்தில் சிக்கினார் இளைஞன்!

முல்லைத்தீவு, மார்ச் 15

மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியபடி எழுந்து நின்று ‘ரிக் ரோக்’ வீடியோ பதிவு செய்த இளைஞர் பாலத்திற்குள் விழுந்து படுகாயமடைந்தார்.

இந்த விபத்து புதுக்குடியிருப்பு நகருக்கு அண்மையாக நேற்று இடம்பெற்றது.

குறித்த இளைஞர் உடையார்கட்டிலிருந்து புதுக்குடியிருப்பு வரை பல இடங்களில் இப்படி வித்தை காட்டியபடி அவர் சென்றுள்ளார் என்று அவரை அவதானித்தவர்கள் தெரிவித்தனர். இதன்போதே அவர் வீதியிலிருந்த பாலத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானார். படுகாயமடைந்த இளைஞர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# அம்பிகை நடத்தும் போராட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதை உறுதி செய்ய முயல்கிறேன்

## தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்

லண்டன், மார்ச் 15

பிரிட்டனில் அம்பிகை செல்வகுமார் கடந்த இரண்டு வாரங்களாக முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்பு போராட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன் என பிரிட்டனின் தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாம் டெரி தெரிவித்துள்ளார்.

வீடியோ செய்தியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

“நான் எனது தொகுதியில் ஆயிரக் கணககான தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்வது குறித்து பெருமிதம் அடைகின்றேன.

இலங்கை தீவில் தமிழர்களை பாதிக்கும் மோசமான பிரச்சினைகள் குறித்து அவர்கள் என்னுடன் எப்போதும் தொடர்பு கொண்டவண்ணமுள்ளனர்.

மிகவும் சமீபத்தில் மனித உரிமைகள் மற்றும் நீதி குறித்து மிகுந்த அக்கறையுள்ள இலங்கையில் பிறந்த அம்பிகையின் இதயத்தை தொடும் கதையை அவர்கள் தெரிவித்தனர்.

அவர் தற்போது மிகவும் கடினமான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். காந்திய கொள்கைகளின் அடிப்படையிலும் இலங்கை தீவில் தமிழர்களை மிகக் கடுமையாக பாதிக்கும் தற்போதைய சில பிரச்னைகளை வெளிப்படுத்த அமைதியாகவும் அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அவர் சமூகத்தினரும் நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற சமூகத்தினரும் நாங்கள் மனித உரிமைகளிற்கு ஆதரவளிக்கவேண்டும் அவரது உணவு தவிர்ப்பு போராட்டம் கருத்தில்கொள்ளப்படவேண்டும் என நான் வெளிவிவகார அமைச்சருக்கு எழுத வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்” என அவர் தெரிவித்தார்.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.